காணிநிலம்

சொல் விளையும் பூமி

தனி இதழ்: ₹25

• ஏப்ரல்-ஜூன் 2018 • இதழ் : 2 • தனிச்சுற்றுக்கு மட்டும்



- உதயசங்கர்
- சுப்ரபாரதிமணியன்
- 'மேலும்' சிவசு
- சுரேஷ் பரதன்
- ஜிதேந்திரன்
- மு.முருகேஷ்
- ஆ.ஆனந்தன்
- சந்திரா மனோகரன்

உள்ளே...

அட்டை ஓவியம்: சண்முகம்

காணிநிலம்

தனி இதழ்: ₹25

சொல் விளையும் பூமி

• ஏப்ரல்-ஜூன் 2018 • இதழ் : 2 • தனிச்சுற்றுக்கு மட்டும்

ஆசிரியர் குழு


- சுப்ரா
- இரா. நாறும்பூநாதன்
- எம்.எம். தீன்
- சண்முகம்
- இரா. செல்வமணி
- ப.தாணப்பன்
- சங்கரராமன்
- ரமணி முருகேஷ்
- சக்தி வேலாயுதம்
- செ.ச.பிரபு

தொடர்புக்கு:

ஆசிரியர் குழு
காணிநிலம் இலக்கிய இதழ்,
29, ‘தமிழ் அகம்’ வி.ஐ.பி. நகர்,
தியாகராஜ நகர்,
திருநெல்வேலி – 11,
அ.எண் – 627 011.
அலைபேசி எண்
94423 28085, 94421 12763
kaaninilam2018@gmail.com
காணிநிலம்

வணக்கம், காணிநிலம் முதல் இதழுக்கு எதிர்பார்த்ததை விட அதிக அளவில் ஆதரவு கொடுத்த வாசகர்களுக்கு நன்றி! தொடர்ந்து இணைந்திருப்போம். ‘காணிநிலம்’ இதழ் வழியாக...

– ஆசிரியர் குழு, காணிநிலம்.



பெருமையும், உரிமையும் படைப்பாளிக்கே...

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா	₹100/-
ஈராண்டுச் சந்தா	₹200/-
ஐந்தாண்டிற்கு	₹500/-
ஆயுள் சந்தா	₹1000/-

வங்கி மூலம் பணம் செலுத்த:
A/C Name. Thanappan P.
A/C No. 119010100045727
IFSC CODE ANDB0001190
ANDHRABANK. TIRUNELVELI.

ஆ.ஆனந்தன்



சிறுகதை

நானும் நாகலிங்கப் பூவும்

இரு சக்கர வாகனத்தை மருத்துவமனையின் அதற்குரிய இடத்தில் நிறுத்தி சைடு ஸ்டாண்டைப் போட்டேன்.

“ஏங்க நீங்க எப்போதுமே சைடு ஸ்டாண்டு போடுறீங்க, வண்டி நாணி கோணி நிக்கிற மாதிரியில்ல இருக்கு, அந்த நடு ஸ்டாண்டைப் போட்டால் என்ன, கம்பீரமா இருக்கும்ல”

சாலா என்னைப் பார்த்து எப்பொழுதும் கேட்கிற கேள்வி இது. இது மட்டுமல்ல இப்படி எத்தனையோ விஷயங்களை அவளால் மட்டுமே வித்தியாசமாக பார்க்க முடியும். பல முறை முயற்சி செய்தும் எனக்கு அப்படி எதுவும் தோன்றியதில்லை. ஆனால் அவள் சொன்னபிறகு நினைத்துப் பார்த்தால் அது அப்படியே உண்மையாகவோ அல்லது



உண்மையைப் போலவோ தோன்றும்.

பைக்கில் இருந்து பைகளை விடுவித்துக் கொண்டு, வலது கையில் சாப்பாட்டுப் பையும் இடது கையில் பழங்கள், பானங்கள், தண்ணீர், மருந்துகள் அடங்கிய பையுமாக மருத்துவமனை வாசல் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

நிழலுக்காக வலது புறம் ஒதுங்கி நாகலிங்க மரத்தின் நிழலோடு நடக்கத் தொடங்கினேன். உதிர்ந்து கிடந்த நாகலிங்கப் பூக்களைப் பார்த்துக் கொண்டே நடந்தேன். இந்த மரத்தை இந்த மருத்துவமனை கட்டியவர்கள் வைத்து இருப்பார்களா அல்லது அதற்கு முன்பே இருந்திருக்குமா, சரியாகத் தெரியவில்லை. இவர்கள் வைத்திருந்தால் நிச்சயம் கட்டிடத்தின் பின்புறம்தான் வைத்து இருப்பார்கள். முன்னால் இருக்கிறது எனவே இருந்த மரத்தை அப்படியே இருக்கட்டும் என விட்டு விட்டு கட்டடம் கட்டியிருப்பார்கள். இப்படித்தான் என்னால் யோசிக்க முடிந்தது, ஆனால் சாலாவினால் வேறு மாதிரி யோசிக்க முடியும்.

“இந்தப் பூக்களை பாத்தியா சாலா, நாகம் காக்கிற லிங்கம் மாதிரி என்ன அற்புதமாயிருக்கு”

“அய்யே, இதப் பார்த்தா உங்க தலை முடி மாதிரியில்லா இருக்கு. கல்யாணம் ஆன புதுசுல ஒரு முன் கொண்டை மாதிரி பஃப் வைத்துக் கொண்டு அலைவீங்களே அது மாதிரியில்ல இருக்கு.”

நான் காலில் மிதிபட இருந்த நாகலிங்கப் பூக்களை மிதிக்காமல் மருத்துவமனை வாசல் ஏகினேன். வாட்சுமேன் “வாங்க சார்” என்று ஒரு சல்யூட் வைத்தார். வாட்சுமேனைப் பார்க்கும் பொழுதெல்லாம் முத்துசாமி சித்தப்பாதான் நினைவுக்கு வருவார்கள். முன் வழுக்கையும், சின்னத் தொந்தியும், தோளில் கழுத்தைச் சுற்றி தொங்கும் அடர் ஊதா கலர் மப்ளரும், என்ன சித்தப்பா அங்கவஸ்திரம் போட்டிருப்பார்கள், உடைக்கு சற்றும் பொருந்தாத காலணியும் அப்படியே முத்துசாமி சித்தப்பாதான். சல்யூட் கூட சித்தப்பா பாணிதான். யார் வணக்கம் சொன்னாலும் சித்தப்பா சல்யூட்தான் ஆனால் கை நெற்றிக்கும் போகாது மார்புக்கும் கழுத்துக்கும் இடையில் நின்று விடும், ஆனால் இதயெல்லாம் முகத்தில் காட்டும் அந்தச் சிரிப்பு மறைத்து விடும். சிரிப்பு என்றால் அப்படி ஒரு சிரிப்பு, அறுபது வயதுக்கு மேல் இந்த மனுஷனுக்கு இப்படி ஒரு சிரிப்பு எதுக்கோ என சித்தி சொல்வது சரியே, அப்படி ஒரு ஆளை மயக்கும் சிரிப்பு.

“என்ன சௌக்கியமா?” என வாட்சுமேனைக் கேட்டுக்கொண்டே மருத்துவமனை படிகள் ஏறினேன். சாப்பாட்டு நேரம் அல்லவா வரிசையாக செவிலியர்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். எல்லா செவிலியர்களும் ஒரே கடையில் வாங்கியிருப்பார்கள் போல ஒரே மாதிரி தலையை சாய்த்துக் கொண்டு, இரண்டு கைகளையும் ஓவர் கோட்டின் கீழ்ப் பகுதி பைகளில் விட்டுக் கொண்டு, ஒரே மாதிரி நடந்து கொண்டு ஒரே மாதிரி அளவெடுத்து சிரித்தார்கள். பொதுவாக ஆஸ்பத்திரிகளில் சிரிப்பை எங்கே காண முடிகிறது. நான் சிரிக்க வேண்டுமா வேண்டாமா என்கிற குழப்பத்துடன் நடந்து கொண்டிருந்தேன்.

“ஏங்க நீங்க சிரிக்கவே மாட்டீங்களா?”

“ஏன் சிரிச்சுக்கிட்டதானே இருக்கேன்”

“சிரிக்கிறதுன்னா இப்படி உதட்டை பிதுக்கி காட்றது இல்லை, வாய்விட்டு கலகலன்னு சிரிக்கணும். வெங்கல தம்ளர் கீழே விழுந்தா பெருத்த ஓசை எழுப்பிவிட்டு அப்படியே அசைந்து அசைந்து ணகணகன்னு ஓசை அடங்கி நிற்குமே அப்படி சிரிக்கணும்”

சிரிப்பது எப்படியென்று சாலாவுக்குத்தான் இப்படி விளக்கிச் சொல்லமுடியும். ஆனால் அவள் சிரிப்பது வேறு மாதிரி இருக்கும், கேட்டால் இது என் சிரிப்பு அது நான் எதிர்பார்க்கிற சிரிப்பு, என புது விளக்கம் கொடுத்து வாயை அடைத்து விடுவாள்.

அவள் சிரிக்கிற சமயம், கன்னத்தில் குழி வந்து விழும். கண்கள் சிறியதாகி, காணாமல் போகும். கண்ணீர் வரச் சிரித்தாள் என்றாள் கேட்கவே வேண்டாம், முகமெல்லாம் சிவந்து, மூக்கு சிவந்து வெகு நேரம் கழித்துத்தான் சிரிப்பு நிற்கும். சிரிப்பு நின்றவுடன் கொப்புளித்து வரும் பார்வை இருக்கே அது அவ்வளவு வசீகரமானதாக இருக்கும்.

லிப்டில் பழுது நீக்கிக் கொண்டிருந்தார்கள். படிகளில் ஏறத் தொடங்கினேன். இரண்டாவது மாடியை அடைய வேண்டும்.

“ஏங்க நீங்க இரண்டு இரண்டு படியா ஏற மாட்டீங்களா?”

“எதுக்கு இரண்டு இரண்டு படியா ஏறணும்”

“எனக்கு ஆசையா இருக்கு ஆனா புடவையைக் கட்டிக்கிட்டு எப்படி முடியும், அதான் உங்களைக் கேட்டேன்”

“ஏன் நீயும் பாண்ட் போட்டுக் கொள்ள வேண்டியதுதானே”

“ஓகோ பொண்டாட்டிய பாண்ட் போட்டு அழகு பார்க்க ஆசையோ”

“ஏன் கூடாதோ”

“வேறு என்ன ஆசையெல்லாம் இருக்கு அதையும் சொல்லுங்க கேட்டுக்கிவோம்”

முதலாவது மாடி வந்து விட்டதை படிக்கு நேரே எதிர் சுவற்றை ஒட்டி ஒரு பெரிய ஜாடியில் வைத்து சரியாக பராமரிக்கப்படாத மணி பிளாண்ட் நினைவுபடுத்தியது. முடிந்தவரை படர்ந்து தன் இருப்பைக் காட்டிவிட்டு மேலும் படர முடியாமல் கொம்பு தேடி அலைந்து கொண்டிருந்தது. சூரிய ஒளி படாத அதன் இலைகள் வெளிறிப் போய் இருந்தன. எனக்கு என்னவோ வெகு நாட்களாக வந்து போய்க் கொண்டிருக்கிற நோயாளிகள் நினைவுக்கு வந்தனர். இன்னும் பதிமூன்று படிகள் ஏறினால் இரண்டாவது மாடி வந்து விடும். ஆனால் இன்னும் அதிகப் படிகள் அமைந்து இரண்டாவது மாடியை அடைய இன்னும் கொஞ்சம் நேரம் ஆனால் தேவலை போன்று தோன்றியது.

இரண்டாவது மாடி வந்து விட்டது. கூடவே களைய முடியாத கனத்த துயரமும், கால்கள் நடக்க மறுக்க, இரண்டு கைகளிலும் பைகள் சுமக்க முடியாத பாரமாய் கனக்கத் தொடங்கின. அழுது விடுவேனோ என்கிற மாதிரியான நிலையில் கண்ணீரால் நிறைந்து எந்நேரமும் வெளிக்கொட்டி விடுமோ என்கிற பயம் கூட வந்து விட்டது.

எனக்கு இது ஒரு மாதிரி பழகிப் போய்விட்டது. ஆஸ்பத்திரியில் அவளுக்காக துணைக்கு இருப்பது என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகிவிட்டிருந்தது. இது நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன் எனினும், ஒரு சாதாரண மனிதனாய் என்னால் சில விஷயங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளத்தான் முடியவில்லை.

“சார் வாங்க எங்கே போயிருந்தீங்க. மேடம் கண் விழித்து உங்களைக் கேட்டாங்க, இப்பத் திரும்பியும் தூங்கீட்டாங்க. தொந்தரவு பண்ண வேண்டாம். எதுவும் வேணும்னா கூப்பிடுங்க நான் இங்கதான் இருப்பேன்” சொல்லிக்கொண்டே செவிலி போக, நான் கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் நுழைந்தேன்.

இருபது வயதில் விசாலாட்சியாய் என்னை வந்தடைந்து சாலாட்சியாய் மாறி இப்பொழுது சாலாவாக பெயர் சுருங்கிப் போனதுபோல அந்த அகலமான கட்டிலில் நடுவே ஒரு மெலிந்த தேகத்துடன் அசைவின்றி படுத்துக் கிடந்தாள். இவள் அப்படி ஒன்றும் இந்த அளவுக்கு மெலிவில்லை, எல்லாம் கொஞ்ச நாளாகத்தான். இவள் இன்னும் கொஞ்சம் ஒரு சுற்று சதை பிடித்தத்துடன் இருந்திருக்கலாம் என நான் நினைத்ததுண்டு. இவள் மெலிவாக இருப்பது என்னவோ நான் உணர்கிற சமீபத்திய குறையாகக் கூட இருக்கலாம்.

இவள் பல சமயங்களில் தூக்கி வைத்துக் கொள்கிற குழந்தையைப் போலவோ, அல்லது ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவோதான் இருப்பாள். மெலிவு என்று வருத்தப்பட்டுக் கொண்டு சிலசமயங்கள் நினைத்தாலும், அதே நினைப்பு சில சமயங்களில் ஓடிச் சென்று அவளை அப்படியே நொறுங்க அணைத்து முத்தமிட வேண்டும் எனவும் தோன்றும்.

இப்பொழுது மெலிவுக்கும் மேலாக கால் கைகளில் நரம்பெல்லாம் புடைத்துத் தெரிகிறது. இடுப்பில் சேலை நிற்க மாட்டேனென்கிறது, ரவிக்கை என்னவோ மரப்பாச்சி பொம்மைக்கு சட்டை போட்டதுபோலிருக்கிறது.

அவளைப் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும் போல் இருந்தது. கைக்கு அருகில் அழைப்பு மணி, இடது பக்கம் எந்த நேரமும் எடுத்து மூக்கில் வைக்க சுவாச உபகரணங்கள், தலைக்கு மேலே மானிட்டர்கள், இதமான குளிர் சாதன வசதி, பக்கத்து ஸ்டூலில் மருந்துகள், மருந்துகள், மருந்துகள். கொஞ்சம் தள்ளி சுவற்றில் மாட்டியிருந்த நாட்காட்டி இன்றோடு நாற்பத்தைந்து நாட்கள் என கணக்கு காட்டியது.

இருபது வயதில் அழகும், யௌவனமும், வனப்புமாக ஒரு தனிப் பிறவியாக, தனி ரசனைகளோடு இருந்தவள். கூந்தல் என்பது அவளுக்கு ஒரு காடு, இரண்டு பேர் இருந்தால்தான் தலை துவட்டி, சிக்கெடுத்து ஜடை போடமுடியும். ஜடை போட்டு முடித்தால் அந்த இரண்டு பேருக்குமே கை வலி வந்து விடும். குளித்து விட்டு குப்புற நின்று தலை முடியை காயப் போட்டால் ஒரு கருத்த கம்பளியை காயப்போட்டது போல் இருக்கும்.. இன்று ஒரு கைப்பிடிக்குள் அடங்கி விடும் கூந்தலுடன் சாலா தூங்குவது சகிக்கவில்லை. அந்த அடர்த்தியான கூந்தலை எங்கு தொலைத்தாள். பாத்ரூமில், படுக்கை அறையில், உப்புத் தண்ணிக் குளியலில், சமையலறையில், மருந்து மாத்திரைகளில். இப்படி புலப்படாத பல இழப்புகளால் தன்னை வருத்திக் கொண்டவள் இப்பொழுது தன் நினைவின்றி கிடக்கிறாள்.

கால் மாட்டில் மாட்டியிருந்த மருத்துவக் குறிப்புகளை ஒவ்வொன்றாக படிக்க ஆரம்பித்தேன், பாதி புரிந்தும், மீதி புரியாமலும் இருந்தது. படித்து முடித்ததும் புரிந்ததும் புரியாமலே இருந்திருக்கலாமே எனத் தோன்றியது.

சாலாவைப் பார்த்தேன் கை அசைவது போலத் தோன்றியது. இந்த பத்து நாட்களில் எனக்கு மட்டும் தோன்றத்தான் செய்கிறது. பார்க்க முடியவில்லை.

“சாலா உன் கை பக்குவமே தனிதான், இன்றைக்கு ஆபீசில் உன் சாம்பாருக்கு ஒரு ரசிகர் கூட்டமே உண்டாயிருச்சு”

“அப்படீன்னா உங்களுக்கு தெரியல, அவங்க சொல்லித்தான் தெரிஞ்சுதாக்கும்”

“அய்யோ அப்படி இல்ல சாலா”

“நான் என்னைக்கும் நல்லாத்தான் வைக்கிறேன், உங்களுக்குத் தெரியல, ஆனா ஆபீசில சொன்னவுடன் பொண்டாட்டி சாம்பார் அருமையாக்கும்”

சாலாவுக்கு மட்டுமில்லை எல்லாப் பெண்களுக்கும் இந்த சூட்சுமம் சமயத்தில் கை கொடுக்கிறது. தன்னையும் விட்டுக் கொடுக்காமல் பிறரையும் அதிகம் காயப்படுத்தாமல் தற்பெருமை சொல்லும் சூட்சுமம் அதீத திறமையானது. இதில் சாலா ஒரு படி மேல் என்றே சொல்லலாம்.

புறங்கையிலும், முழங்கையின் உட்புறத்திலும் எந்நேரமும் மருந்தோ, குளுக்கோஸோ உட்செலுத்த தயார் நிலையில் கிளிப்புகள் மாட்டப்பட்டு நிலைத்து வைக்கப்பட்டிருந்தன. அவள் விரல்களை தடவிக் கொடுக்கவேண்டும்போல் இருந்தது. தூக்கம் கெட்டு விடக்கூடாதே என்று பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

“பாத்தீங்களா எதிர் வீட்டு முருகேசன் வீடு கட்டுறார்” அவள் எதிர் வீடு என்று சொல்வது எங்கள் வீட்டிலிருந்து ஒரு ஆயிரம் அடி தள்ளி இருக்கும், நடுவில் வீடுகள் எதுவும் இல்லாததால் எங்களுக்கு அதுதான் எதிர் வீடு..

“ஆமா அதற்கென்ன”

“அது என்ன படுக்கையறையா?”

“இங்கேயிருந்து எப்படித் சொல்லமுடியும்”

“அங்கே பாருங்க பெரிய ஜன்னல், அதுக்குப் பக்கத்தில் கொஞ்சம் உயரத்திலே சிறிய ஜன்னல், அப்படீன்னா அது அட்டாச்சடு பாத்ரூமுடன் கூடிய படுக்கையறைதானே”

நீ சொன்னா சரிதான்.

“வக்கீல் வீட்டிலே மாமிக்கு உடம்புக்கு முடியலையாம்”

“அப்படியா”

வீட்டை விட்டு வெளியே போகாமலேயே சாலாவால் தன்னைச் சுற்றி நடக்கிற எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இது இவளால் எப்படி சாத்தியமாகிறது என்பது

கண்பாடு நானறிந்து
ஒரு திங்கள் ஆயிற்று
நீ இங்கு வருவாய்
எனப் பார்த்தேன் இச்செவ்வாய்
புதன்கூடப் போயாச்சு.
வியாழனும் வந்தாச்சு.
வானில் வெள்ளி பூத்தாச்சு.
என் வாழ்வில் புகுந்ததோ சனி
என நான் எண்ணுகையில்
ஞாயிறென நீ வந்தாய்
என் முகம் மலரச் செய்தாய்.

– ஆனி ஞானமுத்து.

இன்று வரை என்னால் அறிய முடியாத ரகசியம். அதுவும் பெண்கள் தாழ்ந்த குரலில் ஒருவொருக்கொருவர் பேசிக்கொள்ளும் அத்தனை விஷயங்களும் சாலாவைத் தாண்டிதான் மற்றவர்களுக்குப் போய்ச் சேரும். இவள் சொல்லவில்லையென்றால் எனக்கும் எதுவுமே தெரியாமல் போய்விடும்.

சில சமயங்களில் இதெற்கெல்லாம் என்ன பதில் சொல்லமுடியும் என்கிற மாதிரியும் தோன்றும். எப்படியோ இவளுடன் பல சமயங்களில் பேசவும் சில சமயங்களில் பேசாதிருக்கவும் வேண்டியதிருக்கிறது. புரிந்து விடுவதும் புரியாமலே போவதும் அவளுக்குத் தெரியாமலே நடந்து விடுகிறது.

சாலா இலேசாக அசைவது போலத் தோன்றியது. இல்லை அசையவில்லை.

எல்லா இரவுகளும் இப்படி அமைந்து விடுவதில்லை. இந்த மாதிரி இரவுகள் எப்பொழுதாவதுதான் அமையும். அப்படி அமைந்த ஒரு அற்புதமான மழை நேர இரவில், முயங்கிப் பெற்ற இன்பம் இன்னும் மிச்சமாய் உடலெங்கும் மனமெங்கும் வழிந்து கொண்டிருக்க, சாலா எனது இரண்டு கைகளையும் எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுந்தப் பிடித்துக் கொண்டு

“ஏங்க உங்களுக்கு கோபமே வராதா?”

“ஏன் நல்லா வருமே”

“இத்தனை வருஷத்திலே என்னையை ஏங்க கோபிச்சிகிட்டதே இல்ல”

“தெரியல”

“அப்ப ஒரு தடவை என்னைப் பார்த்து கோபப்படுங்க”

“அதுக்கு இதுவா நேரம்”

கண்கள் குளமாகிக் கொண்டிருந்தன. கண்ணீர் வெளியேறி கைகளில் விழுந்தது..

சாலா இலேசாக அசைவது போலத் தோன்றியது. வாய் ஏதோ முணு முணுப்பது போலத் தோன்றியது. வாய் அசைந்தது போலவும் இருந்தது, வாய் அசையாதது போலவும் இருந்ததது.

ஒன்றிலிருந்து மற்றொன்று மற்றொன்றிலிருந்து இன்னொன்றுமாய் நினைவுகள் தாவித் தாவி என்னையும் என் தனிமையையும் வதைக்கத் தொடங்க எழுந்து போய் ஜன்னலைத் திறந்தேன்.

காற்று அறைக்குள் நுழைந்தது. கூடவே இளம் பச்சை வெள்ளை, இளம் சிவப்பு கலந்து ஆண் மகரந்தங்கள் பெண் சூழை குடை பிடித்துத் தாங்கும் நாகலிங்கப்பூவின் மணமும் நுழைந்து என்னையும் அறையையும் சூழ்ந்து கொண்டது... ●

வேறென்ன இருக்க முடியும்?

முன்வாசல் படியில் ஏறியவன்
கண்களால் முழுதும் துளாவி
கடைசிக்கும் இரண்டு முன்தள்ளிய
இருக்கையில் அமர்ந்து கொண்டான்
பேருந்துக்குள் எல்லோரும்
ஜோடியாயிருப்பது போலிருந்தது
அவன் தனிமை
புறப்பட்டதும் கொஞ்ச நேரத்தில்
ஓட்டுநரின் தலைக்குப் பின்னாலிருந்த
தொலைக்காட்சியில்
நாயகனும் நாயகியும்
காதலித்துக் கொண்டிருந்தார்கள்
என் இனிய பொன்நிலாவே....
மீசையரும்பிய வயதிலிருந்து
ஓராயிரம் முறை கேட்டும்
பார்த்துமிருப்பான்
ஒலியும் இசையும் பாடலுமின்றி
வேறேதோ குடைந்தது அவனை
காரணமின்றி எழுந்து
சுற்றும் பார்த்தவனின்
உள்ளுக்குள் ஏதோ உடைந்தது
யார் யாருக்கோ யார் யாரோ
கிடைத்து விடுகிறார்கள்.
தலையசைத்து குனிந்தபடி
இருக்கையில் சரிந்தான்
ஆமாம் அந்தப் பாடலில்
வேறென்ன இருக்க முடியும்?

– ப.செல்வகுமார்



செரிக்காத ஒற்றைப் பசு

சூறைக்காற்றுக்கு
ஊரைக் காத்து நின்ற
கீரிக்காட்டு மலை
கிரானைட் கற்களாக
உருத்தெரியாமல் போனதென
நினைத்தும் பார்க்காமல்

பொங்கிப் பாய்ந்த வாய்க்கால்
புதர்மண்டிக் கிடப்பதை
அறியாமல்

கதிர் விளைந்த களத்துமேடு
கனரகத் தொழிற்சாலையாகிவிட்டதெனத்
தெரியாமல்

நாலாதிசைகளிலும்
பழங்களைச் சிதறடித்த நாவல் மரங்கள்
நாற்கரச் சாலைகளுக்காக
பிடுங்கி எறியப்பட்டது
காதுக்கே எட்டாமல்

பெரியகுள மேற்குகரைப் புல்வெளியில்
மேய்ந்து திரும்பும்
பெருமந்தை மாடுகளை நினைத்து
பேரனிடம் கேட்கிறார்
வெகுநாட்களாய்த் திண்ணையில்
படுத்திருக்கும் தாத்தா
பசுமாடு எப்போது கன்று ஈனுமென.

மா என்று குரல் கொடுக்கிறது
பின் கொட்டகையில்
நெகிழிப் பைகளைத் தின்று
செரிக்காத ஒற்றைப் பசு!

– கீர்த்தி

மஞ்சள் ஆடையுடுத்தி
மங்கலகரமாய்
நிற்கிறது வேப்பமரம்..

சூலத்தினடியில்
பாத காணிக்கையாய்ப்
பாவப்பட்ட மனிதர்களின்
பத்தும் இருபதும்
படபடத்துக் கொண்டிருக்க..
உடுக்கையின் சத்தம்
உச்சஸ்தாயில் ஒலிக்கிறது.

மேலத்தெரு முருகனின்
காணாமல் போன பசு...

பரமு அக்காவின்
ஓடிப் போன மகன்...

இட்டலிக் கடை
பொன்னம்மாவின்
மகளின் திருமணம்....

விடைதெரியாத கேள்விகளுக்கு
விளக்கம் சொல்லுமுன்
கந்துவட்டி கணேசனைப்
பார்த்தவுடன்
படுவேகமாய் வந்திறங்கினாள்
சாமியாடியின் மேல்
ஆத்தா......




– மதுரா, தஞ்சாவூர்

சதுப்பு நிலக்காடுகளும், பொக்கோடனும்

கட்டுரை

சுப்ரபாரதிமணியன்



சமீபத்தில் சிங்கப்பூரில் கிராஞ்சி பகுதி சதுப்பு நிலக் காடுகளுக்குச் சென்றது நல்ல அனுபவமாக இருந்தது..சிங்கப்பூரின் ஒரு பகுதி, ஜோகூரை ஒட்டிய மலேசியப் பகுதி என்றமைந்திருந்தது. இரண்டு வழிகள் சுற்றிப்பார்க்க உண்டு. எதில் சென்றாலும் ஒரு சுகமான அனுபவமே கிட்டும். பல அரிய பறவைகள், முதலைகள், பல்லிகள் என்று கண்ணில்பட்டன. தமிழக சதுப்பு நிலக்காடுகள் போல் அங்கு அதிக அளவு நுண்ணுயிர்கள் இல்லை. அதேபோல் அடர்த்தியான பகுதி இல்லை. ஆனால் அதை மாணவர்களும் இயற்கை ஆர்வலர்களும் கொண்டாடும் விதத்தில் முக்கியத்துவம் கொண்டதாகும். அதன் மேல் விமானங்கள் பறந்து பயமுறுத்திக் கொண்டிருந்தன. ஆனால் அது பாதுகாக்கப்பட்ட விதமும் பராமரிக்கப்பட்ட விதமும் ஆச்சர்யம் தந்தன. சிங்கப்பூர் மலேசியா நாடுகளின் நீர்ப்பகுதிகளை உள்ளடக்கியிருந்தது அக்காடு. தமிழ்நாட்டின் அலையாத்திக்காடுகளின் பெருமை பற்றி அங்கு வந்திருந்த பலரிடம் குறிப்பிட்டேன்.

மெரினா, உலகின் இரண்டாவது மிக நீளமான கடற்கரை, சிறுவாணி, உலகின் இரண்டாவது மிக சுவையான நீர் இவையெல்லாம் தமிழ்நாட்டின் சிறப்புகள். இதே போல் சிதம்பரம் நகருக்கு பக்கத்தில் இருக்கும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய அலையாத்தி காடுகளான பிச்சாவரம் அலையாத்தி காடுகள் மிகவும் முக்கியமானவை. இந்தியாவின் மாபெரும் அலையாத்திக்காடுகள் கங்கை நதி சங்கமம் சுந்தரவனம். அதன்பின் அந்தமான்... மூன்றாவது காவிரியின் கழிமுகம்.

பட்டுக்கோட்டை அருகிலுள்ள திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் உள்ள அலையாத்தி காடுகள் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய சதுப்பு நிலக்காடுகளாகும். ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களிலும், சேறு கலந்த சதுப்பு நிலங்களிலும் அலையாத்தி காடுகள் வளர்கின்றன. கோரையாறு, பாமணி ஆறு, வளவனாறு, கிளைதாங்கி ஆறு, நசுவினி ஆறு, பாட்டுவனாச்சி ஆறு, கண்டபறிச்சான் கோரையாறு, மரைக்காகோரையாறு ஆகிய ஆறுகள் திருவாரூர் மாவட்டம்





முத்துப்பேட்டையில் கடலில் கலக்கின்றன. அதில் ஆழமற்ற பகுதி லகூன் எனப்படுகிறது. கழுதை முள்ளி, நரிக்கண்டல், வெண்கடல், பன்னுக்குத்தி, கருங்கண்டல், சிறுகண்டல், தில்லை, திப்பரந்தை, நெட்டை, சுரப்புன்னை, குட்டை சுரப்புன்னை, மலட்டு சுரப்புன்னை, சோமுந்திரி, சோனரேசியா எபிடெலா உள்ளிட்ட மரங்கள் வளர்கின்றன. சாம்பல் நிறத்தில் இருக்கும் இம்மரங்கள் செப்டம்பர் முதல் நவம்பர் வரை பூக்கும் தன்மை கொண்டவை. வேர்கள் மூலம் சுவாசிக்கும் தன்மையுடைய அவை, சென்னியா, மௌரனா எனப்படும் தாவர வகைகளைச் சார்ந்தது.

புவியியல் அமைப்பில் முக்கியமான ஈரப் பத நிலப்பகுதியாக அமைந்திருப்பவை முத்துபேட்டை அலையாத்தி காடுகள். சுனாமி பேரலையில் இருந்து முத்துப்பேட்டையை காப்பாற்றியது அலையாத்தி காடுகள்தான். ஆழிப்பேரலை இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்தைக் கடுமையாகத் தாக்கியது. அலையாத்திக் காடுகள் அழிந்து போன இடங்களில் இறால் பண்ணைகள் வந்து விட்டன என்பது வேதனையானது. திருவாரூர் மாவட்டத்தை இயற்கை சீற்றங்களில் இருந்து காக்கக் கூடிய அரணாகவும் அவை உள்ளன. கல்லில் அலைகள் ஏற்படுத்தும் சக்தியையும் நீரோட்ட விசையையும் அலையாத்தி மரங்கள் கட்டுப்படுத்துவதால் அலையாத்திக் காடுகள் எனப்படுகின்றன. மாங்குரோவ் என்றும் சொல்கிறார்கள். இந்த கட்டுப்படுத்தும் சக்தி இவற்றின் சுவாச வேர்களுக்கு உண்டு. இயற்கை இறால் இங்குதான் முட்டையிடும். நண்டுகளின் புகலிடமாகவும் இது உள்ளது. சாம்புவானோடை படகு துறையில் இருந்து இருபுறமும் அலையாத்தி மரங்களைக் கொண்ட நீர்ப் பாதையில் சுமார் 7 கி.மீ தூரத்தைக் கடந்தால் கடல் முகத்துவாரத்தைக் காணமுடியும். இப்பாதையில் ஏராளமான திட்டுகள் குட்டித் தீவுகளாகக் காட்சி அளிப்பது பார்ப்பதற்கு அழகு. கீப் கார்னர் செல்லி முனை, லகடன் கடல் முகத்துவாரம் சேத்குடா உப்புத் தேரோட்டம் ஆகியன இங்குள்ள அழகுமிகு பகுதிகள்

அதிரை அதிராம்பட்டிணத்தில் தொடங்கும் இந்த அலையாத்திக்காடுகள் முத்துப்பேட்டை வழியே தொண்டியக்காடு பகுதி வரை சுமார் 70 கிலோமீட்டர் தூரம் வரை கடற்கரை ஓரத்தில் சதுப்பு நிலப்பகுதியில் அமைந்துள்ளன. சைபீரியா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, இலங்கை, மலேசியா, பாகிஸ்தான், மத்திய ஆசியா மற்றும் ரஷ்யாவின் வடபகுதிகளில் 20க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து செங்கல் நாரை, குளக்கிடா, கடல்ஆழா, மையில்கால் கோழி, பனங்கொட்டை, சிறவி பாம்பு தாரா, நத்தகொத்தி நாரை, பவளக்கால் உள்ளான், பூநாரை, சாம்பல் நாரை, நாமக் கோழி, வெள்ளைக் கொக்கு என பல வகையான பறவைகள் இந்த அலையாத்திக்காடுகளுக்கு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரையில் அதிக எண்ணிக்கையிலானப் பறவைகள் இந்த பகுதிக்கு வருகின்றன. இப்பறவைகள் சைபீரியா, மத்திய ஆசியா, ரஷ்யாவின் வடபகுதி மற்றும் ஐரோப்பா போன்ற உலகின் பல பகுதிகளில் இருந்து வருகின்றன.

அலையாத்தி காடுகளைக் காண தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நாள்தோறும் சுற்றுலா பயணிகள் குவிகிறார்கள். முத்துப்பேட்டை, ஜாம்புவானோடை போன்ற பகுதிகளில் இருந்து மீனவர்களின் படகு மூலம்தான் சென்று சுற்றிப்பார்க்க வேண்டும். 7 கிலோ மீட்டர் தொலைவு ஆற்றில் செல்லும்போது இருபுறமும் இருக்கும் அலையாத்தி காடுகள் கண்ணுக்கு குளிர்ச்சி அளிக்கும். பார்வை கோபுரங்களில் ஏறி லகூன் அழகை காணலாம். அங்குள்ளதில் யாழ்பாணத்தான்கோரி, சீப் கார்னர், செல்லிமுனை பார்வை கோபுரங்கள்,

நடுவாய்க்கால், உப்புத்தோட்டம், வவ்வால் தோட்டம் ஆகியவை பார்க்க வேண்டிய இடங்கள்.

சதுப்பு நிலக் காடுகளின் அழகைக் காண வரும் சுற்றுலா பயணிகள் தங்கி இளைப்பாற ஓய்விடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு 162 மீட்டர் நீளத்திற்கு மரத்திலான நடை பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது போன்ற அமைப்பு வேறு எந்த சதுப்பு நிலக் காடுகளில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர ஓய்விடத்திலிருந்து சதுப்பு நிலக் காடுகளைக் காணும் வகையில் கண்காணிப்பு கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. திரைப்படங்களில் காதல் காட்சிகள், சண்டைக்காட்சிகள் என்று விதவிதமான காட்சிகள் இப்பகுதிகளில் படமாக்கப்பட்டு சாதாரண மக்களும் கண்டு களிக்க ஏதுவாக இருந்திருக்கிறது.

அலையாத்தியில் சொரப்புன்னை, கண்டல், பெண்கண்டல், நரிக்கண்டை, நல்லமாடா ஆகிய மரங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் அதிகம் காணப்படுவது நரிக்கண்டை. தமிழ்நாட்டில் கடலில் கலக்கும் 33 ஆறுகளிலும் நன்கு தூர் வாரி சுத்தம் செய்து பிராணவாயு அளவை அதிகரிக்கச்செய்து கண்டல், வெண்கண்டல், நரிக்கண்டல், சொரப்புன்னை, தில்லை போன்ற மரங்களை நட்டு வளர்க்கலாம். சுனாமி, இயற்கை சீற்றக்காலங்களில் பயன் தரும். பாதுகாக்கும். தமிழ்நாட்டில் அலையாத்திக்காடுகள் எண்ணிக்கை சுமார் 40 இடங்களில் உள்ளன. ஆனால் கேரளாவில் பத்துதான். அங்கு ஒரு பொக்கோடன் கிடைத்திருந்தார்.

பொக்கோடன் 78 வயதில் சென்றாண்டு இறுதியில் கேரளாவில் மரணமடைந்தார். திருவனந்தபுரம் திரைப்பட விழாக்களில் சில ஆண்டுகள் இவரின் புகைப்படங்களைப் பார்த்திருக்கிறேன். விழாவுக்கு வந்ததாகச் சிலரும் சொன்னார்கள். சுற்றுச்சூழல் போராளியான இவர் இரு மலையாளப்படங்களில் நடித்திருந்தார் என்பதே திரைப்பட விழாவில் இவர் பெயர் அடிபடக்காரணமாக இருந்தது. அதிலொன்று 'ஸ்தலம்' என்ற இவரின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட சிவபிரகாஷின் இயக்கத்திலான படம். அய்ந்து ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது. இன்னொரு படம் மூன்று ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த 'பாப்பிலியோ புத்தா' என்பதாகும் இதில் பொக்கோடன் நடித்திருந்தார். இடம்பெயர்ந்த தலித் மக்கள் மீதான அரசு வன்முறையையும் அடக்குமுறையையும் பற்றி இப்படம் பேசியது.

கேரள சதுப்புநிலக்காடுகளின் நாயகனாக 1லட்சத்திற்கும் அதிகமான மரங்களை பல இடங்களில் நட்டு அலையாத்திக்காடுகளின் வளர்ச்சிக்கு வாழ்க்கை முழுவதும் பாடுபட்டவர். சதுப்பு நிலக்காடுகள் வெப்பமும் உப்புத்தன்மையும் உள்ள இடங்களில் வெப்பத்தைத் தாங்கி வளரும் இயல்புடையது. தாவரங்கள், பிராணிகளை இயற்கைச் சீற்றங்களிலிருந்து காக்கக் கூடியது. சுனாமி போன்ற பெரும் அபாயங்களிருந்து பல பகுதிகளைக் காத்தபோது பெரிதும் அலையாத்திக்காடுகளின் பயன் பற்றி அதிகம் பேசப்பட்டது. தமிழகத்தின் பிச்சாவரம் புகழ் பெற்ற சதுப்பு நிலக்காட்டுப் பகுதியாகும். இலங்கையில் மிக அதிகமான அளவில் சதுப்புநிலக்காடுகள் உள்ளன. சுனாமி, அதீத வெள்ளம் போன்ற அபாய காலங்களில் நிலத்தைச் சேதங்களிலிருந்து பாதுகாக்கும். மற்ற நிலப்பகுதிகளை விட 5 மடங்கு கரியமிலவாயுவை உள்ளிழுக்கும். நண்டு இறால் போன்ற இனப்பெருக்கங்களுக்கும் பறவைகளின் பாதுகாப்பிற்கும் ஏற்ற இடம்.. கேரளாவில் சதுப்பு நிலக்காடுகளை ஏற்படுத்த வேண்டிஅதன் அவசியம் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்களை பள்ளி, கல்லூரி முதற்கொண்டு பொதுமக்களிடமும் நடத்தியவர்.1லட்சம் கன்றுகளை நட்டுப் பராமரிப்பும் வளர்ப்பில் கவனமும் செலுத்தி சதுப்புநிலக்காடுகளை உருவாகியவர்.

"அரசியல்வாதிகள் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றி நன்கு அறிந்து கொண்டால்தான் நம் குழந்தைகளும் அதில் அக்கறை எடுத்துக் கொள்வர்" என்பதை அரசியல்வாதிகளிடம் வலியுறுத்தி வந்தவர். பள்ளி மாணவர்களிடமும் சொல்லி வந்தவர். இடம் கிடைக்கிற இடத்திலெல்லாம் நட்டார். மரங்களை பஞ்சாயத்து நிலம், புறம்போக்கு என்றெல்லாம் நட்டார். பலவகையில் எதிர்ப்புகள். நில ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்த்தார்கள். தவறாக நிலத்தைப் பயன்படுத்துவோர் புறக்கணித்தார்கள். பிராந்து என்று பட்டமிட்டு புறக்கணித்தார்கள். அவர் நட்டதையெல்லாம் பிடுங்கி எறிந்தார்கள். ஆனால் தொடர்ந்து செயல்பட்டார். 1994ல் இவரின் செயல்பாடுகளுக்கு அரசாங்கம் ஆதரவு தந்தது. அதன்பின் மக்கள் ஆதரவும் பலமடங்கு பெருகியது. சதுப்புநிலமர விதைகள், கன்றுகளை தொடர்ந்து விதைத்தும், நட்டும் கவனத்திற்குள்ளானார். "பள்ளிக்குழந்தைகள் பாடப்பையுடன் காற்றில் அலைக்கழிந்த போது அவர்களை சதுப்பு நில மரங்களால் காப்பாற்ற எடுத்த முதல் முயற்சியில் இது ஆரம்பித்தது"

மார்க்சிஸ்ட் கம்யூ.கட்சியில் இருந்த பொக்கோடன் அதிலிருந்து வெளியேற சாதி, தலித் பற்றிய பார்வையும் விவசாயிகள் பிரச்சினையும் முக்கியமானதாக இருந்தன. புலையர் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் அவர். இவரின் வாழ்க்கை படமாகியிருப்பதைப் போல் இவரின் சுயவரலாற்று நூல் பல பல்கலைக்கழகங்களில் பாட நூல்களாக இருந்தது. இரண்டாம் வகுப்பு வரையே படித்தவர். 18 வயதில் மார்க்ஸ்சிஸ்ட் கட்சியில் சேர்ந்தவர். 1964ல் பொதுவுடமை இயக்கப் பிளவின் போது இடது அணியில் இணைந்தார். ஆனால் தொடராமல் விலகினார். பல மார்க்சிய குழுக்களோடு இணைந்து செயல்பட்டார். பல முறை சிறை சென்றிருக்கிறார். மாணவர்கள் சமூக அக்கறையும் சுற்றுச்சூழல் உணர்வும் கொண்டு இயங்க வேண்டியதன் அவசியத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். மூன்று நூல்களும் எழுதினார். மூன்று மகன்கள். மூன்று மகள்கள். சதுப்பு நிலக்காடுகள் பற்றிய கல்வித்திட்டங்களை உருவாக்கினார் என்பதும் முக்கியம். பல முக்கிய விருதுகளை சுற்றுச்சூழல் பணிகளுக்காப் பெற்றவர். இவர் பிறந்த போது இவரின் தொப்புள்கொடி சதுப்பு நில மரவிதையைப் போல் காணப்பட்டதால் இவருக்கு பொக்கொடன் என்று பெயரிட்டதாக இவரின் மனைவி மீனாட்சி தெரிவித்திருந்தார்.

...

இயற்கை வேளாண் உழவர்களுக்கு முன்னோடியாக இருந்தவர் பாஸ்கர் சவே. குஜராத்தின் தென்கிழக்கு முனையில் இருந்த வல்சத் மாவட்டம் தேஹ்ரி என்ற கிராமத்தில் கல்பவிருக்ஷா என்ற இயற்கை வேளாண் பண்ணையை நடத்தி வந்தார். ஆரம்பப்



பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தவர் பாஸ்கர் சவே, 1956-ல் ஆசிரியர் பணியைத் துறந்து இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டார். இயற்கை வேளாண்மையில் நிறைய பரிசோதனைகளையும் புதிய முயற்சிகளையும் மேற்கொண்டார். பாஸ்கர் சவேயின் வேளாண் முறைகள் இயற்கையில் இருந்த கூட்டு வாழ்க்கையைப் பற்றிய ஆழமான புரிதலை அடிப்படையாகக் கொண்டவை. தற்கொலையிலிருந்து விவசாயிகள் மீள ஒரே வழி இயற்கை வேளாண்மை மட்டுமே என்று வலியுறுத்தினார். உலகப் புகழ்பெற்ற இயற்கை வேளாண் அறிஞரான மசானபு ஃபுகோகா, பாஸ்கர் சவேயின் பண்ணைக்கு வருகை தந்து பல பயிற்சிகள் தந்திருக்கிறார். 'இது உலகிலேயே சிறந்தது. என்னுடைய பண்ணையையும் விஞ்சியது'.

பாஸ்கர் சவேயின் 10 ஏக்கர் பண்ணையில் பல்வேறு பயிர்கள் கலந்து பயிரிடப்பட்டுள்ளன. நிரந்தரத் தோட்டப் பகுதியில் தென்னை மரம், சப்போட்டா, இரண்டு ஏக்கரில் அரிசி, பருப்பு உள்ளிட்ட பருவகாலப் பயிர்களும் சாகுபடி செய்தார்.

ஜீரோ பட்ஜெட் வேளாண்மையாக அதை வடிவமைத்தார். ஜீரோவிலிருந்து வேளாண்மையின் நூறு சதவீதப்பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல அவர் பயன் படுத்திய இயற்கை வேளாண்மை முறை அவரிடமிருந்து கற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த பல முன்னோடித் திட்டங்கள் உள்ளன. ●



துணையாகக் கொஞ்சம்...!

முழுநிலவுப்
பொழுதொன்றின்
விழுகின்ற வெளிச்சத்தில்
எழுகின்ற அலைகளோடு நான்
கைபிடித்து விடியுமட்டும்
கதைபேச வேண்டும்...

நட்டநடு இரவொன்றின்
கூட்டுமரக் காட்டினில்
கொட்டுகின்ற பனியோடு
புலியொன்று வருகிறதாவென
விழிகள்திறந்து தூங்காது
நான் காத்திருக்க வேண்டும்...


முன்னிருட்டு வேளைதனில்
மின்னுகின்ற வெளிச்சத்தோடு
கண்சிவந்து போகும்வரை
சிலிர்த்தோடும் பரணியில்
குளித்துக் களித்து நான்
குதூகலம் கொள்ளவேண்டும்...

வெந்தழல் காலத்தில்
சொந்தங்கள் இல்லாது
முந்திரித் தோட்டம்தரும்
நிழற்குடைக்குள் அமர்ந்து நான்
சந்தக்கவியொன்றினை
சத்தம்போட்டுப் படித்திருக்க வேண்டும்...

யாரேனும்
வாருங்களேன்
துணையாய்க்கொஞ்சம்..!

– பாப்பாக்குடி இரா.செல்வமணி

ஈ மொச்ச பண்டம்



தினசரி நாளிதழ்மேல் கூறுபோட்டு
காத்திருக்கும் உப்பு நெல்லிக்காய்...
ஹார்லிக்ஸ் பாட்டிலுக்குள் துயிலும்
கம்மர்கட்...
அலுமினிய தட்டினில்
துண்டாக்கப்பட்டு மிளகாய் பொடி
தூவப்பட்டு அடுக்கப்பட்ட கிளிமூக்கு
மாங்காய்..
காற்றுபுகா ஃபாரெக்ஸ் டப்பாவிலிட்ட
பொரிஉருண்டை...
விரித்த வாழை இலையில் சிரிக்கும்
இலந்தைப்பழம்...
கண்ணாடிக் குடுவைக்குள்
முழிக்கும் தேன் மிட்டாய்....
சைக்கிளில் விற்கும் பால் ஐஸ், சேமியா
ஐஸ்....
எதுவும் வாங்கித் தின்னக்கூடாது
ஈ மொச்ச பண்டங்களாம்...
பின் எப்படி
கால் வயிற்றை நிரப்புவாள்
முத்தம்மா பாட்டியும்...
ஆறுமுகம் மாமாவும்....

– ப.தாணப்பன்



இன்னுமிருக்கிறதே நினைவலைகள்

பார்க்கும் பொழுதெல்லாம்,
சாகாமல் இன்னுமிருக்கிறதே
நினைவலைகள்....

ஆடிக்காற்றும் நகரும்
நினைவுகளும் சில்லென அடிக்க,
கரை தொடா சிற்றலைகள்
சிதறியடித்தது,
சற்றுயர்ந்துறங்கும்
பேருந்தில் ஜன்னலோர பயணியான
என் கன்னத்தில் முத்தமிட விழிக்கிறேன்,

மயில் தோகையென விழிகள் விரிய,
பட்டாம் பூச்சியின் சிறகென
இமைகள் படபடக்க,
என் முன்னே அகன்று விரிந்திருந்தன
நினைவிலுள்ள நயினார் குளம்...

தேடுகிறேன் இன்று,
வறண்டு விரிசல்களோடு,
நெகிழிப் பைகளால்
போதைப் பாட்டில்களால் குமிந்திருந்தன,

கண்களிலிருந்து இறங்கிய
கண்ணீரலையென படர்கிறது கன்னங்களில்..

ஆம் பார்க்கும்பொழுதெல்லாம் சாகாமல்
இன்னுமிருக்கிறதே நினைவலைகள்
என்றவாறே கடந்து செல்கிறேன்,
சற்று நின்று சென்ற பேருந்து பயணத்தில்
சிறு அதிர்வலைகள்..,

ஆடிக்காற்றுமில்லை
அலைகளுமில்லை,
நீருமில்லை,
நிலமும்...ம்ம்ம் ?

– செ.ச.பிரபு



'முதலாம் உணவுப்போர்'

மந்திக்கூட்டத்தினைப்போல்
இந்த மாந்தர்க்கூட்டங்கள்
உணவுகளை எல்லாம்
பிடிங்கித்திண்ணும் காலம்
எம் கண்களுக்கு
புலப்பட்டுவிட்டது...

ஆயுதங்கள் பல ஏந்தி
பலத்த பாதுகாப்போடு
உணவுப்பண்டங்களை
கட்டுப்பாட்டு கருவி போல
எடுத்துச்செல்கின்ற காலம்
எம் கண்களுக்குள்
ஓடிக்கொண்டு இருக்கிறது..

வறண்ட புவிதனில்
வற்றாத மனம்
ஒட்டுநீரிலும் சொட்டுநீரிலும்
நிலம் பற்று நீரிலும்
விவசாயமின்றி தவித்தழுது
எழும் விவசாயபெருமக்களின்
கோபம் எம் கண்களில்
சிவப்பாய் ஒளிர்ந்தது..

ஒன்றை ஒன்றாய் சுரண்ட
வறுமையின் கோரப்பிடியில்
தாக்குபிடிக்க முடியாமல்
முழுவதும் தன்னைத்தானே
அடிமைகளாக்கி அடிமைகளாகி
கொண்டிருக்கின்றன
பல நாடுகள்..

விரைவில் இந்த உலகம்
தேம்பித்தேம்பி
அழத்தான் போகிறது
இந்த "முதலாம் உணவுப்போரில்"

– ம.சக்திவேலாயுதம்



நிறம் மாறிய விளக்கு

வெண்மையாய் வெளிச்சத்தைப்
பரவ விட்டுக் கொண்டிருந்த
அந்த விளக்கின் வீழ்ச்சி
ஆகாயத்து விண்மீன்களை
அது ஆச்சரியத்தோடு
அண்ணாந்து பார்த்ததொரு
நாளில்தான் தொடங்கியிருக்கக் கூடும்.

உயர உயரப் பறந்து
நட்சத்திரக் கூட்டத்தில்
இணைந்து அனைவரையும்
அண்ணாந்து பார்க்கச்
செய்யும் ஆசை
எண்ணமாய் ஏக்கமாய்
தீவிரம் கூடிக்கூடித்
திக்கெட்டும் வழிகளைத்
தேடத் தொடங்கியது...

அதன் தேடுதலைத் தெரிந்து,
அதனை அடையும் உபாயம்
அறிந்தவர்களாகக் காட்டிக்
கொண்ட பலர்
ஆறுதலாய் வந்து பேசினர்...

முதலில் நிறம் மாறுதல்
அதிமுக்கியமென்று கூறி
தாங்கள் கொண்டு வந்திருந்த
வர்ணங்களைப் பூசத்தொடங்கினர்
அதன் மீது மெல்ல மெல்ல...

ஏன் எதற்கென்று
எதுவும் சொல்லவுமில்லை..
அப்படிக் கேட்க ஒரு வாய்ப்பும்
வழங்கவில்லை...

மெல்ல நிறம் மாற்றி,
தங்களின் விருப்பத்திற்கு
உரு மாற்றி,
எல்லாம் முடிந்தபோது
ஆகாயத்தை அடைந்திருக்கவுமில்லை
நட்சத்திரமாகவும் மாறியிருக்கவில்லை...

மாறாகத் தன் நிறம் மட்டும் இழந்து,
ஏதோ ஓர் இருண்ட மூலையில்
சிவப்பாய் இப்பொழுது
அழுது வழிந்து கொண்டிருக்கிறது
அந்த விளக்கு...!

– ஆதியோகி

■ மொழிபெயர்ப்புக் கவிதைகள் ■

பஞ்சாபி, ஆங்கில மூலம்: **சிவ்குமார் படல்வி**
தமிழில் : **சந்திரா மனோகரன்**

பஞ்சாபி மொழிக் கவிதைகள்

துன்ப இரவு

துயரமிகு நீள் இரவுகளோ, அல்லது
என் பாடல்களோ முடிவற்றவை
பேரச்சம்கொண்ட இரவும்
என் பாடல்களும் நீண்டவை
இந்த நீர்நிலைகள் எவ்வளவு ஆழமானவை
எவராலும் அவற்றை அளவிட முடியாது
ஆனால், மழைப்பொழிவு அவற்றை நிரப்புவதோ
வறட்சியில் வற்றிப்போவதோ நிகழ்வதில்லை

என் எலும்புகளுக்கு என்னவோ ஆகிவிட்டது
அவைகளை எரிதழல் பொசுக்குவதில்லை
பெருமூச்சுக்கள் அவைகளைச் சுடுகின்றன
துயரங்கள் அவைகளை எரித்துவிடுகின்றன

இவைதான் காதலின் ரணங்கள்
இதற்கு என்ன சிகிச்சை, நண்பனே
குணம் பெறுதல் சாத்தியமா ?
தொடுதல் மேலும் புண்ணாக்குகிறது
காயம் போக்கும் எண்ணெயும் வருத்துகிறது

வனப்புமிகு இரவு நிலவுக்குச் சொந்தம்
கரிய இரவு யாருக்கு உரியது ?
சந்திரன் விண்மீன்களுக்கிடையில் ஒளியுமா ?
நட்சத்திரங்களும் நிலவுக்குள் மறையமுடியாது

சொற்கள்

நேற்று, நான் சொற்களை சேகரித்தேன்
அதிலொன்று, போதிமரத்தில் ஏறிக்கொண்டது
பிறிதொன்று, ஆலமரத்தில்
இன்னொன்று, என் தெருவில் அலைந்துகொண்டிருந்தது
வேறொன்று, மண்குடுவைக்குள் கிடந்தது
பசும்சொல் வயல்வெளியில் உறைந்துகிடந்தது
கருஞ்சொல் தசையைத் தின்றுகொண்டிருந்தது
நீலவண்ண சொல் பறந்து சென்றது
ஒளியின் இழை சொல்லின் அலகில் குவிந்திருக்க
இவ்வுலகின் சிறுதுறும்பும் சொற்களாக ...
சொற்களின் விழிகள்
சொற்களின் கரங்கள்
ஆனால், ஒரு வாயின் வழியே கேட்கும்
சொற்களை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை
சொற்களை என்னால் வாசிக்கத்தான் முடியும்
சொற்களை என்னால் வாசிக்கத்தான் முடியும்

படைப்பாளிகள் கவனத்திற்கு...

'காணிநிலம்' இதழ் நெல்லையில் உள்ள இலக்கிய ஆர்வலர்கள் சிலரின் கூட்டு முயற்சியாகும். எனவே இதழ் தயாரிப்புக்கென்று தனிப்பட்ட கட்டமைப்புகள் எதுவும் கிடையாது. ஆகவே 'காணிநிலம்' இதழுக்கு படைப்புகள் அனுப்பும் படைப்பாளிகள் தயவு செய்து 'யுனிகோட்' எழுத்துருவில் தட்டச்சு செய்து 'காணிநிலம்' மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

படைப்புகளை சுருக்கவோ, சிறு மாற்றங்கள் செய்யவோ இதழின் ஆசிரியர் குழுவிற்கு உரிமையுண்டு. படைப்புகளின் பெருமையும் உரிமையும் படைப்பாளிகளையேச் சேரும். படைப்பாளிகள் வேறு இதழ்களிலோ, அல்லது இணைய இதழ்களிலோ, முகநூலிலோ வெளியான படைப்புகளை அனுப்ப வேண்டாம்.

படைப்பாளிகள் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

– ஆசிரியர் குழு, காணிநிலம்

படைப்புகள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: kaaninilam2018@gmail.com

சிறுகதை

உதயசங்கர்



கணிதல்

அறிவியல் ஆசிரியர் தவசிக்குக் கோபம் கொப்பளித்தது. சிவ்வென்று முகத்தில் ரத்தம் ஏறிக்கொண்டிருந்தது. அறையிலிருந்த பெரிய சன்னல் வழியே அந்த அதிகாலையில் வீசிய குளிர்ந்த காற்று கூட அவருடைய கோபத்தின் தணலைக் குறைக்க முடியவில்லை. மறுபடியும் அந்த ரிகார்டு நோட்டின் முதல்பக்கத்தைத் தன்னிச்சையாகவே திருப்பினார். அதில் பெயரோ, வரிசை எண்ணோ எழுதப்படவில்லை. வெள்ளைத்தாள் அவரைப் பார்த்துச் சிரித்தது. முன்னும் பின்னும் ரிகார்டு நோட்டின் பக்கங்களை விரித்துப் பார்த்தார். எந்த அடையாளமும் இல்லை. என்ன தைரியம்? பேர், வரிசை எண், எழுதாமல் வைத்து விட்டால் கண்டுபிக்க முடியாதா? யாருன்னு சிக்கட்டும். அப்புறம் இருக்கு மண்டகப்படி! அவர் அந்த ரிகார்டு நோட்டைமட்டும் தனியாக எடுத்து வைத்தார்.

புத்தம்புது நோட்டு. அழகாக காக்கி நிற அட்டை போட்டு பார்க்க நேர்த்தியாக இருந்தது. மறுபடியும் உள்ளே திருப்பி அந்தப்படத்தைப்பார்த்தார். செம்பருத்திப்பூவின் படமும் அதன் குறுக்குவெட்டுத் தோற்றத்தின் படமும் அவ்வளவு நேர்த்தியாக இல்லாவிட்டாலும் பார்க்கும்படியாக இருந்தது. வலதுபுறம் சாய்ந்த கையழுத்தில் பாகங்கள் குறிக்கப்பட்டிருந்தன. சுமாரான விலை குறைந்த பென்சிலாக இருக்க வேண்டும். பென்சிலும் சரியாகப் பதியவில்லை. கூர் தீட்டப்படவில்லை. யாராக இருக்கும்? எங்கே கண்டுபிடி? பார்க்கலாம். என்கிற மாதிரி அந்தப்படத்திற்குக் கீழே கையெழுத்து. அவருடைய கையழுத்து. அவர் போடாத அவருடைய கையெழுத்து அவரைப்பார்த்து கேலியாகச் சிரித்தது. அவருடைய கையெழுத்தைப் போட்டே ரிகார்டு நோட்டை



அவரிடமே கொடுக்க வேண்டும் என்றால் என்ன நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்.

ஆசிரியர் தவசியின் மனதில் அவருடைய வகுப்பில் உள்ள பையன்களின் முகம் நழுவுப்படக்காட்சி போல ஓடிக்கொண்டிருந்தது. எல்லோரின் முகத்திலும் ஒரு கள்ளப்புன்னகை இருந்ததாக இப்போது தெரிந்தது. யாரையும் நம்பமுடியவில்லை. ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே தான் ஒரு முன்மாதிரியான ஆசிரியராக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார். அதற்காக ஆசிரியர் பயிற்சி பாடத்திட்டங்களைத் தாண்டி கற்பித்தல் சம்பந்தமாக பல நல்ல நூல்களைத் தேடித்தேடி வாசித்தார். கிஜுபாய் பகேகேயின் பகல் கனவு, டோட்டோசான் ஜன்னலில் ஒரு சின்னஞ்சிறுமி, ஜான் கோல்ட்டின் குழந்தைகள் எப்படி கற்கிறார்கள்? எளிய அறிவியல் நூல்கள் குழந்தை இலக்கிய நூல்கள், என்று பல நூல்களைத் தேடித்தேடிப் படித்தார். கல்லூரிக்காலத்தில் கவிதை எழுதுகிற பழக்கம் இருந்தது. சிலகவிதைகள் பிரசுரம் ஆகியிருந்தது. அந்த வாசனையினால் இலக்கியப்பரிச்சயமும் இருந்தது. பொது நூலகங்களில் இலக்கிய நூல்களைத் தேடித்தேடி வாசித்தார். ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் படித்து முடித்ததுமே ஒரு லட்சிய ஆசிரியராக தன்னை மாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டார். அவருடைய பள்ளிக்காலத்தில் அவருக்கு ஒரு லட்சிய ஆசிரியர் இருந்தார். அவர் கனகசுந்தரம் ஐயா.

கனகசுந்தரம் ஐயா பள்ளிக்கூடத்தில் நுழைந்து விட்டால் போதும் மாணவர்கள் அவரை மொய்த்துக் கொண்டே இருப்பார்கள். அவருடைய சுத்தமான கைத்தறி ஆடை, கம்பீரமான நடை, இசை போன்ற பேச்சு, எப்போதும் புன்னகை சிந்தும் முகம், அகன்று விரிந்த நெற்றி என்று பார்த்தவுடன் ஒரு வார்த்தையாவது பேசவேண்டும் என்று தோன்றும். அவர் கோபப்பட்டு மாணவர்கள் பார்த்ததில்லை என்பார்கள். ஆனால் கோபம் வரும்படி யார் நடந்தாலும் அவர் அந்தப்பையனைத் தனியாகக் கூப்பிட்டுப் பேசுவார். ஒரு வார்த்தை கூட அவன் செய்த தவறைப் பற்றிப் பேசாமல் அவனுடைய நேர்மறையான நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசுவார். அவருடைய மென்மையான பேச்சும் மாணவனின் தோளில் அரவணைக்கிற மாதிரியான தொடுதலும் எந்தப்பையனையும் அசைத்து விடும். அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே அவன் கண்களில் கண்ணீர் கோர்க்கும். கடைசிவரை அவனுடைய தவறைப் பற்றிப் பேசாத பெருந்தன்மையின் வெம்மையில் அவன் புடம் போட்டவனாகி விடுவான். அவர் அவனைப் போகச்சொல்லும் போது அவனாகவே நாத்தழுதழுக்க,

“இனிமே அப்படிச் செய்ய மாட்டேன் ஐயா..” என்று சொல்லுவான்.

அவர் அப்போதும் முகம் நிறைந்த சிரிப்போடு அவன் தோளில் தட்டுவார். அவ்வளவு தான். மாணவர்களை எதற்கெடுத்தாலும் மிரட்டவோ, உருட்டவோ, செய்ய மாட்டார். அந்த வயதுக்குரிய குறும்புகளை அவரும் ரசித்துச் சிரிப்பார். மற்றவர்களை எந்த வகையிலும் புண்படுத்தாத நகைச்சுவைகளைக் கைதட்டி ரசிப்பார். அவருடைய கையில் பிரம்பை மாணவர்கள் பார்த்ததேயில்லை. அவர் மீது மாணவர்கள் அவ்வளவு அன்பு செலுத்தினார்கள். அந்த அன்பை எப்படியாவது காண்பித்து விடவேண்டும் என்று ஆலாய்ப் பறப்பார்கள். கிராமத்துப்பையன்கள் அவருக்கு நிறைய தானியங்கள், காய்கறிகள், கொண்டுவருவார்கள். நகரத்துப்பையன்கள் வீட்டிலிருந்து பண்டம்பலகாரங்கள் என்று கொண்டுவருவார்கள். அவருக்குத்தெரியும். அந்த எளிய பள்ளியில் யார் யார் ஒருவேளை மதிய உணவுக்காகவே பள்ளிக்கூடத்துக்கு வருபவர்கள் என்று. அவர் அந்தப்பையன்களை அழைத்து அவருக்குக் கொடுப்பதற்காகக் கொண்டுவந்த மாணவன் கையால் கொடுக்கச் சொல்வார். சிலசமயம் அவரே எல்லோருக்கும் சமமாய் பிரித்துக் கொடுத்து விடுவார். அதேபோல பண்டம் பலகாரங்களை எல்லோருடனும் சேர்ந்து சாப்பிடுவார். எப்போதும் மாணவர்களின் கண்கள் அவரையே பார்த்துக் கொண்டிருக்கும். மாதம் ஒரு நாள் விடுப்பு அன்று மாணவர்கள், ஆசிரியர்கள், எல்லோரும் சேர்ந்து பள்ளியைச் சுத்தம் செய்வார்கள். அன்று ஒரே பாட்டும் கூத்துமாய் இருக்கும். பொழுது கழிவதே தெரியாது. எல்லோரும் சேர்ந்து அவரவர் வீட்டிலிருந்து கொண்டுவந்த சாப்பாட்டை ஆளுக்கொருவாய் சாப்பிடுவதில் என்ன இன்பம்! கனக சுந்தரம் ஐயா சின்னப்பிள்ளைகள் மாதிரி ஓடி ஓடி வேலை செய்வார். இவ்வளவு சீக்கிரம் பொழுது போய் விட்டதே என்று வருத்தமாக இருக்கும். தவசி வீட்டில் ஒரு துரும்பை எடுத்துப் போடமாட்டான். ஆனால் பள்ளியில் அவ்வளவு வேலைகளைச் செய்வான். அதன் பிறகு வீட்டிலும் வேலைசெய்ய ஆரம்பித்தான்.

அப்போதே அவனுக்குள் அவன் எதிர்காலத்தில் என்னவாக ஆக வேண்டும் என்று தீர்மானமாகி விட்டது. எப்போதும் ஆசிரியராவதைப் பற்றிய கனவிலேயே இருந்தான். பள்ளியில் தானே எதிர்காலச் சமூகம் உருவாகிறது. அந்தச் சமூகத்தின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு எத்துணை மகத்தானது! ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றது தெரிந்ததுமே அவனுடைய கனவுகள் நனவாகும் சந்தர்ப்பம் கைகூடி வந்ததை நினைத்து மகிழ்ந்தான். அவன் நினைத்தமாதிரியே கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளியே கிடைத்தது. பள்ளியில் சேர்ந்து ஆறுமாதத்திலேயே ஆசிரியர் தவசி மாணவர்களிடம் பெயர் பெற்று விட்டார். எல்லாமாணவர்களையும் ஐயா என்றே அழைத்தார். எப்போதும் சிரித்த முகத்துடன் இருந்தார். வகுப்பில் எத்தனை தடவை வேண்டுமானாலும் பாடங்களை நடத்தினார். பலவீனமான மாணவர்களுக்கு என்று தனியாக வகுப்புகள் நடத்தினார். ஏன் மாணவர்களின் குடும்பப்பிரச்னைகளைக் கேட்டு அவர்களுடைய வீட்டுக்குச் சென்று பெற்றோர்களிடம் பேசினார். அவருடைய சக்திக்கு உட்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு சொன்னார். அதனால் ஊர்மக்களிடமும் மதிப்பு உயர்ந்தது. எப்போதும் மாணவர்கள் ஆசிரியர் தவசி பின்னாலேயே சுற்றிக்கொண்டிருந்தனர். இந்த வகுப்பு தான் என்றில்லை எல்லாவகுப்பு மாணவர்களும் அவரைச் சுற்றி இருந்தனர். உடன் வேலை பார்த்த பல ஆசிரியர்களுக்குப் பிடிக்கவில்லை. சிலர் பின்னால் பேசினார்கள். சிலர் ஆசிரியர் தவசியிடம் வந்து

“சார் உண்டானதைச் சொல்லிக்கொடுங்க.. போதும் அதுக்குத்தான் சம்பளம் தர்றாங்க... நீங்க கூடுதலா வேலைபாக்கறீங்கன்னு எக்ஸ்டிராவா அலவன்ஸ் எதுவும் கொடுக்கமாட்டாங்க.. சார்.. இதுகளை எல்லாம் படிக்க வைச்சிரமுடியும்னு நெனைக்கிறீங்க..”

என்று சொல்லிச் சிரித்தனர். அவர்களிடம் தவசி அமைதியாக,

“சார் கற்பித்தலை நான் ஒரு வரமா நினைக்கிறேன்.. அது என் லட்சியமும் கூட.. நீங்க நினைக்கிற மாதிரி எல்லோரும் நினைச்சிருந்தா அப்துல்கலாமோ, அண்ணாதுரையோ, நம்முடைய பெயர் சொல்லியிருக்க முடியாது.. இது கொஞ்சம் நாடகத்தனமாக்கூட இருக்கலாம்.. ஆனால் யதார்த்தமான உண்மை..”

என்று சொன்னார். அதைக்கேட்டு சில ஆசிரியர்கள் தவசியைப்போலவே இன்னும் கூடுதலாக சிரத்தை எடுத்தனர். பழனிச்சாமி தவசியுடன் சேர்ந்து தவசியைப்போலவே மாறிவிட்டார். இப்படி வந்த ஆறுமாதத்தில் அந்தப்பள்ளியின் பெயர் கல்விமாவட்டத்தில் பேசுபொருளாக மாறும்படி செய்து விட்டார். ஆனால் இந்தச்சூழ்நிலை அவருடைய சுயமரியாதையைக் கேள்வி கேட்டது.

அவருடைய கை தன்னையறியாமலேயே முன்னால் கொத்தாகக் கிடந்த தலைமுடியை சுருட்ட ஆரம்பித்தது. அவருடைய சிந்தனையில் என்னென்னவோ தாறுமாறாய் ஓடியது. இன்று வகுப்பு தேர்வு இருக்கிறது. அதற்கு கேள்விகளை எழுதவில்லை. துணைத்தலைமையாசிரியர் டி.இ.ஓ. ஆபீசுக்கு கடந்த ஐந்து வருடங்களின் பத்தாவது வகுப்பு தேர்ச்சி விகிதாச்சாரத்தை அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருந்தார். அவருக்கு மிகவும் பிடித்த அறிவியலறிஞர் டார்வினின் பரிணாமக்கோட்பாடு பற்றிய பாடத்தை அனுபவித்து நடத்த வேண்டும். மாணவர்களுக்கு பாடத்தைத் தாண்டிய புரிதலை ஏற்படுத்த வேண்டும். என்றெல்லாம் நேற்றிரவு யோசித்து வைத்திருந்தார்.

கடிகாரத்தின் மணி ஏழு அடித்தது. எப்போதும் முதல் ஆளாய் பள்ளிக்குள் நுழைந்து விடுவார். ரிகார்டு நோட்டுகளில் வரிசையாகக் கையெழுத்து போட்டு விட்டு அந்தக் குறிப்பிட்ட நோட்டை மட்டும் எடுத்துத் தனியாக வைத்துக் கொண்டார். இந்தப் பிரச்னையைச் சாதாரணமாக விடவும் முடியவில்லை. பெரிய பிரச்னையாக்கவும் முடியவில்லை. பேசாமல் தலைமையாசிரியரிடம் ரிப்போர்ட் செய்து விட்டு ஒதுங்கி விடலாம் என்று நினைத்தார். தலைமையாசிரியர் சந்திரமோகன் தவசி மீது அபரிமிதமான மரியாதையும் அன்பும் கொண்டவர். அதனால் அளவுக்கு அதிகமாக விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துவிடுவாரோ என்று பயமாக இருந்தது. தானும் என்ன செய்ய முடியும்? யாரோ ஒரு பையனின் குறும்பு என்று விட்டு விடவும் முடியவில்லை. கண்டுகொள்ள வில்லையென்றால் எல்லோரிடமும் ஒரு அலட்சியமும் இளக்காரமும் தோன்றிவிடும் அபாயம் இருக்கிறது. அளவான தண்டனை கொடுக்க வேண்டும். தவசிக்கு இப்படி ஒரு சூழ்நிலையில் மாட்டிக்கொள்வோம் என்று நினைக்கவேயில்லை. ஒருவேளை தன்னுடைய ஆசிரியர் கனகசுந்தரம் ஐயாவுக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் என்ன செய்திருப்பார்? தவசிக்குக் குழப்பமாக இருந்தது. தலை வலித்தது. எழுந்து பள்ளிக்குக் கிளம்பினார்.

பள்ளிக்கூடத்தில் எல்லாம் வழக்கம் போலவே நடந்தன. அவருடைய வகுப்பில் நுழையும்போது பிள்ளைகளின் முகம் மலர்ந்த சிரிப்புடன் கூடிய முகமனைக் கண்டு மகிழ்ச்சியும் அடைந்தார். ஒவ்வொருவர் முகமாய் ஆராய்ந்தார். இவனாக இருக்குமோ? அவனாக இருக்குமோ? சரி. ரிகார்டு கொடுத்து விடலாம். யார் என்று தான் பார்க்கலாம் என்று மனதில் முடிவு செய்து கொண்டு ஒவ்வொரு மாணவரின் பெயரையும் அழைத்து ரிகார்டு நோட்டுகளைக் கொடுத்தார். அப்படிக் கொடுக்கும்போது அந்த ரிகார்டு நோட்டைப் பற்றி சில வார்த்தைகள் நல்ல விதமாகக்கூறி இன்னும் நன்றாகச் செய்ய ஊக்குவித்தார். எல்லோருடைய நோட்டுகளையும் கொடுத்து முடிந்தபிறகு, தனியாக எடுத்து வைத்திருந்த அந்த ரிகார்டு நோட்டை எடுத்தார்.

“ யாருக்கு ரிகார்டு நோட்டு வரலை... எழுந்து வாங்கையா..”

ஒரு கணம் வகுப்பறை அமைதியாக இருந்தது. வகுப்பில் நான்காவது பெஞ்சில் மூன்றாவதாக இருந்த வேலுமணி எழுந்தான். அவனைப்பார்த்ததும் ஆசிரியர் தவசிக்கு அதிர்ச்சி. அவர் அவனாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. வகுப்பில் ரொம்ப அமைதியான பையன். படிப்பதில் முன்னேறிக்கொண்டிருக்கிற பையன். அவனுடைய வீட்டுச்சூழ்நிலைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிற பையன். அவருடைய கண்கள் அவனையே நம்ப முடியாமல் பார்த்தன. அவருடைய கைகள் அவனை அழைத்தன.

வேலுமணி எழுந்தவுடனேயே ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்று உணர்ந்து கொண்டான். தவசி ஐயாவின் கண்களில் இருந்த கடுமையைக் கண்டதும் அவனுடைய கண்கள் கலங்க ஆரம்பித்தன. அவன் பெஞ்சில் இருந்து விலகி ஆசிரியரின் மேஜைக்கு அருகில் சென்றான். வகுப்பறை அமைதியாக இருந்தது. யாருக்கும் எதுவும் புரியவில்லை. அவன் அருகில் வந்ததும்,

“இது உங்க ரிகார்டு நோட்டுதானாய்யா..” என்று கேட்டார் ஆசிரியர் தவசி.



மிருகத்தோல் நீக்கிய
கருணை

தனியாக இருக்கிறேன்
இப்போதெல்லாம்
எதிரிக்கும் நிகழக்கூடாத
அந்நினைப்பு மட்டும்
மின்னலாய்ப் பளிச்சிட்டு
அதிலென்னை மூழ்க விடுகிறது.

ஒருவேளை
அந்நிகழ்வு நடந்து முடியும்
தருணம்
அலைவந்து அழித்துப் போகும்
மணல்வீடாய்த் தடமின்றி
கரைந்துப் போயிருப்பேன்.

கண்ணிலிருந்து வழியும்
துயரத்தின்
நீரொழுகலைத் துடைத்துவிட
நானுன் கரங்களை
எதிர்க்கொண்டு காத்திருக்கிறேன்.
அதை மரண பயத்தின்
எதிரொலியென்றே நீ கொள்ளலாம்.

இதற்காக
புதிய கருணை எதையும் தேடி
என்மேல் திணிக்க வேண்டாம்.
உன் கருணைகளில்
பழையன ஒன்றை மிருகத்தோல் நீக்கி
என்மீது வீசிவிட்டுச் செல்.
அவை பரவி மிதந்து
என் பயநரம்புகளுக்கு
சிறிதேனும் வலுச் சேர்க்கட்டும்.

– பாரியன்பன்

உலர்ந்த அந்த வார்த்தைகளில் இருந்த உணர்ச்சியின்மை வேலுமணியை ஏதோ செய்தது. அவன் கண்களில் திரையிட்டிருந்த கண்ணீரின் வழியே தன்னிச்சையாக மேஜை மீது தனியாக வைக்கப்பட்டிருந்த அந்த ரிகார்டு நோட்டினைப் பார்த்தான். ஆம் என்று தலையை அசைத்தான்.

தவசி அந்த ரிகார்டு நோட்டினைத் திருப்பி படம் வரைந்திருந்த பக்கத்தை அவன் பக்கமாகத் திருப்பினார். விரலால் அந்தக் கையெழுத்தைச் சுட்டிக்காட்டியபடியே,

“ என்னய்யா இது ? “

என்று கேட்டார். அதைப்பார்த்தானோ இல்லையோ வேலுமணி சத்தமாய் அழ ஆரம்பித்தான். ஆசிரியர் தவசி எதுவும் சொல்லவில்லை. அவருடைய முகம் இளகியது. மனதில் கனகசுந்தரத்தின் சிரித்த முகம் ஒருகணம் தோன்றி மறைந்தது. அப்போது தான் கவனித்தார் வேலுமணி அவரை மாதிரியே தலைமுடியைச் சீவியிருந்தான். எப்போதும் அவர் பின்னால் சுற்றும் பலபேரில் அவனும் ஒருத்தனாய் இருந்தான் என்று ஞாபகத்துக்கு வந்தது. அவர் எழுந்து வேலுமணியின் அருகில் சென்றான். அவர் அப்படி எழுந்திரிப்பதற்காகவே காத்திருந்தது போல வேலுமணி அவருக்கு அருகில் வந்து அணைந்து கொண்டான். அவனைச் சேர்த்தணைத்துக் கொண்ட தவசி குனிந்து அவனுடைய கண்ணீரைத் துடைத்து விட்டார். அவனுடைய கண்களில் இருந்த பயத்தைத் தன்னுடைய சிரிப்பினால் துடைத்தார். அவனுடைய முதுகில் மெல்லத் தட்டிக்கொடுத்த படி

“போய் அழிரப்பரை எடுத்துட்டு வா..”

என்று மென்மையாகச் சொன்னார். வேலுமணிக்கு நடந்து கொண்டிருப்பதை நம்ப முடியாதவன் போல நின்று கொண்டிருந்தான். அவர் இன்னமும் அவனுடைய தலைமுடியைக் கோதி விட்டார். அவருடைய மனம் நிறைந்திருந்தது. கண்களில் அன்பின் ஒளி வீசியது. என்ன நடந்தது என்று தெரியாத அந்த வகுப்பில் அன்பின் மணம் வீசியது. மாணவர்களின் முகத்தில் அபூர்வமான நிறைவு பூத்திருந்தது. ●

விட்டுவைக்கலாமே…

அந்த நூற்றாண்டு நெடுமரம்
அகற்றப்பட்ட இடத்தில்
நட்டுவைக்கப்பட்ட மைல்கல்
ஏனோ “நடுகல்” போலவே இருக்கிறது...

வாகனஒலிகளைந்த
நள்ளிரவில் உற்றுக்கேட்டால் உணரலாம்
சில பறவைகளின் விசும்பல்களை...


கதவுகளில் சித்திரமாய் தீட்டப்பட்ட
மரங்களின் கிளைகளில்
காற்று சற்று நேரம்
தங்கிச்செல்லும் நொடிகளை
கைவைத்து உணர்ந்திருக்கிறீர்களா
என்றாவது?

ஒவ்வொரு அழைப்புமணி
ஓசையின்போதெல்லாம்
கீச்சிடும் குருவிகளின்
பதிவிசைக்கும் ஒலிகேட்டு...

களைந்து போன கூடுகளில் இருந்து
தொலைந்துபோன தன் குஞ்சுகளின்
அழைப்பென மருகிமருகி
தத்திப் பறந்து வந்தமரும்
தாய்க்குருவிக்கு உணவிட்டிருக்கிறீர்களா?

நட்டுவைத்தோமே ஏதேனும்
மரக்கன்றை என்றல்லாது போயினும்
விட்டுவைக்கலாமே இன்னும்
வேர்களில் ஒட்டிக்கொண்டிருக்கும்
மரம் செடி கொடிகளையாவது.

–சாயாசுந்தரம்.





கடந்த வியாழக்கிழமை நெல்லையில், தினமணியின் 'மகளிர் மணி' சார்பில் நடந்த 'மகளிர் மணி பெண் சாதனையாளர் விருது' வழங்கும் விழாவிற்கு நெல்லையிலுள்ள குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களும் படைப்பாளிகளும் வந்திருந்தது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. நிகழ்ச்சி முடிந்தபோது கவிஞர் இரா. நாறும்பூநாதன், நண்பர் எம்.எம்.தீன் உள்ளிட்டோர் வெளிக்கொணர்ந்திருக்கும் 'காணிநிலம்' என்கிற காலாண்டு இலக்கிய இதழை எனக்குத் தந்தார்கள். தமிழ்ச்சுற்றுக்கு மட்டுமாக நெல்லையிலுள்ள பத்து பன்னிரண்டு படைப்பாளிகள் ஒன்று சேர்ந்து, மாதம்தோறும் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பங்களிப்பாக நல்கி, கூட்டுமுயற்சியில் வெளிக்கொணரும் காலாண்டு மாத இதழ்தான் 'காணிநிலம்'. அந்தப் பத்திரிகையின் இலக்கு என்ன என்பதைத் தலைப்பிலேயே அவர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இது குடியிருக்கும் காணிநிலமல்ல, பயிர் வளர்க்கும் காணி நிலமல்ல, இவர்கள் கொண்டுவந்திருப்பது சொல் விளையும் காணிநிலம்.

முதல் இதழைப் புரட்டினால் அதில் முதலில் காணப்படுவது எம்.எம். தீன் எழுதிய 'அபராஞ்சி' என்கிற சிறுகதை. மொழிபெயர்ப்புக் கதைகள், ஏராளமான கவிதைகள், கட்டுரைகள் என்று ஒரு ஜனரஞ்சகப் பத்திரிகையின் அத்தனை அம்சங்களுடனும் ஓர் அற்புதமான இலக்கியக் காலாண்டிதழ் நெல்லைத் தரணியிலிருந்து வெளிவந்து கொண்டிருப்பதைப் பார்த்தபோது, எனக்கு ஒரே பரவசம்.

வெள்ளிக்கிழமை சென்னை திரும்புவதற்கு முன்பு நான் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்கிற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தேன். ஒரு சில நிமிடங்களில், அவர்களே என்னைத் தேடி நெல்லை அலுவலகம் வந்துவிட்டார்கள். அந்த இலக்கிய ஆர்வம் கொண்ட படைப்பாளிகளுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அது ஏற்படுத்திய தாக்கம் சொல்லி மாளாது.

தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் இதுபோன்ற சிற்றிதழ்கள்தாம் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன என்கிற என்னுடைய நீண்ட நாள் கருத்துக்கு வலு சேர்க்கிறது 'காணி நிலம்'. இதற்கு ஆயுள் சந்தா வெறும் 1000 ரூபாய்தான். நான் ஆயுள் சந்தாதாரராகிவிட்டேன், நீங்கள்?

'காணிநிலம்' முதல் இதழ் குறித்து 'தினமணி', 'தமிழ்மணி' 'இந்த வாரம்' பகுதியில் கலாரசிகன் (திரு.வைத்தியநாதன், ஆசிரியர் தினமணி) அவர்களின் கருத்து மற்றும் பாராட்டு...

காணிநிலம் இதழுக்கு மருத்துவர் த.இராசலிங்கம்
தமிழ்அறம் இதழாசிரியர் (தூத்துக்குடி) அவர்களின் வாழ்த்துப்பா.

காணிநிலம்

தமிழ்ப்பயிரை இலக்கியநீர் ஊற்றிக் காக்கும்
தரம்மிக்க படைப்பென்னும் வேலி யிட்டே!
கமழ்கின்ற பூக்களாகப் பாக்கள் பூக்கும்
காணிநிலம் கண்கவரும் தோட்ட மாகும்.

உழுபவனின் உயர்வினையே உணர்வில் தேக்கும்
உழைப்பவனின் உலையினிலே உணவும் இட்டே!
வழுக்கில்லா வளங்களையே வாழ்வில் சேர்க்கும்
வாழ்த்திடுவீர் காணிநிலம்! வாட்டம் போகும்.

இன்சுவையாய் புதுக்கவிகள் தேனால் ஆக்கும்
இதமான சிறுகதைகள் தங்கத் தட்டே!
என்சொல்லி ஏத்திடுவேன் இனிமை போக்கும்
ஏகிடுவீர் காணிநிலம்! மனமே மேவும்!

சிந்தனைகள் சிறகடிக்கும் செகமே சொக்கும்
சீர்திருத்தக் கருத்துக்கள் கரும்புக் கட்டே!
வந்தனைகள் செய்திடுவோம்! எட்டுத் திக்கும்
வையத்தில் காணிநிலம் வானம் தாவும்! ●

சுரேஷ் பரதன்



சந்நதம்

சிறுகதை

பெரியம்மாவிற்கு சந்நதம் வந்து விட்டதென்பது அவள் மூசுமூசுவென்று விடும் பெருமூச்சிலிருந்தும் மூடியிருக்கும் அவள் கண்களிலிருந்து தாரை தாரையாய் வழியும் கண்ணீரிலிருந்தும் எல்லாருக்கும் தெரிந்து விட்டது. கைகளை முறுக்கிக் கொண்டே தலைக்கு மேல் தூக்கியவாறு மேலும் பல பெருமூச்சுகளை எறிந்த பெரியம்மாவைப் பார்த்து ஆச்சிதான் யாரு வந்திருக்கிறது.. என்ன வேணும்.. சொன்னாத்தானே தெரியும். ஏன் கண்ணீரா வடிக்கிற.. என்று கேட்டாள். அதற்கெல்லாம் பதிலே சொல்லாத பெரியம்மா முறுக்கிய கைகளை கீழேயிறக்கி மீண்டும் முறுக்கியவாறே மேலே ஏற்றினாள். கண்களிலிருந்தும் கண்ணீர் நின்றபாடில்லை. பெரியம்மாவுக்கு சந்நதம் வருவது இது முதன்முறையல்ல என்பதால் வந்திருக்கும் சாமி கண்டிப்பாய் பேசும் என்று எல்லாருக்கும் தெரியும். இருந்தாலும் சாமியாய் பேசினால் தான் உண்டு. அதுவரை அம்மா, அப்பா, ரமணியக்காள், நான் என எல்லாரும் அமைதியாய் நின்று கொண்டிருப்போம். ஆச்சி மட்டுந்தான் கேள்விகளைக் கேட்ட வண்ணமிருப்பாள்.

சந்நதம் வரும்போது பெரியம்மா கோயில்களில் பெண்கள் சாமியாடுவார்களே அதுபோல தங்தங்கென்று குதித்தெல்லாம் ஆடமாட்டாள். கைகளிரண்டையும் விரல்களோடு விரல்களைக் கோர்த்துக் கொள்வாள். பின்னர் அவற்றை அதிகபட்சமாக முறுக்கிக் கொண்டு தலைக்கு மேலும் கீழும் ஏற்றி ஏற்றி இறக்குவாள். ஹூம் என்ற பெரிய சத்தத்தை அடிக்கடி எழுப்புவாள். மூடிய கண்களிலிருந்து கண்ணீராய்க் கொட்டுவாள். பின்னர் அப்படியே சப்பணமிட்டு அமர்ந்து கொள்வாள். வீட்டில் எல்லாரும் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்போம். பிறகு ஆச்சி கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வாள். பெரும்பாலும் அந்த பதிலில் எல்லாருக்கும் சந்தோசமான செய்தி இருக்கும். சிறிது நேரத்திற்கப்புறம் கண்களிலிருந்து வடியும் கண்ணீர் நின்றுவிடும். அப்போதும் கண்களைத் திறக்க மாட்டாள் பெரியம்மா. மூடிய கண்களோடுதான் எல்லாருக்கும் திருநீறிடுவாள். பின் தன் நெற்றியிலும் பட்டையாய் திருநீறிட்டுக் கொண்டு கொஞ்சத்தையள்ளி வாயிலிட்டுக் கொள்வாள். ஒரு சொம்பு நிறைய தண்ணீர் வாங்கிக் குடிப்பாள். அப்புறம் அமர்ந்த நிலையிலிருந்து மாறி விளக்கை மண்டியிட்டு வணங்குவாள். வணங்கியெழுந்து மீண்டும் கற்பூரம் காட்டுவாள். பின்னர் வாசற்படிக்கருகில் சென்று அமர்ந்து கொள்வாள். கொஞ்ச நேரத்திற்கு யாரிடமும் எதுவும் பேச மாட்டாள். அதற்குப் பின்னர் சகஜ நிலைக்கு வந்து விடுவாள்.

இப்போதும் அப்படித்தான் நின்ற நிலையிலிருந்து பெரியம்மா மெல்ல சம்மணமிட்டு அமர்ந்தாள்.

சொல்லுளா யார் வந்துருக்கிறது.. என்று இப்போதும் ஆச்சிதான் மீண்டும் கேட்டாள்.

நான் தான் வந்திருக்கேன்..

நான்தான்னா யாருளா..

தெரியலையா என்று கீழுதட்டை வாய்க்குள் உள்ளிழுத்துக் கடித்தாள். மீண்டும் தெரியலையா என்றாள். ஆச்சிக்குத் தெரிந்து விட்டது. அவளுக்கும் இப்போது கண்ணீர் வந்தது. அம்மாவுக்கும் தெரிந்து விட்டது. அவளும் வாய் பொத்தி அழுதாள். பதிமூன்று வயதில் மஞ்சக் காமாலையில் இறந்து போன ராஜாத்தியக்காள் தான் வந்திருக்கிறாள். அவள் தான் எப்போதும் கீழுதட்டை வாயின் உள்பக்கமாய்க் கடித்த வண்ணமிருப்பாள். காமாலை கண்ட பத்தாம் நாள் குளிர் ஜுரம் வந்து உடம்பு மேலுங்கீழும் தூக்கித் தூக்கிப் போட்டுத் துடித்து ஒரு அந்திக் கருக்கலில் இறந்து போனாள். அப்போது எனக்கு ஆறு வயதிருக்கும். இருந்தாலும் அவள் கீழ் உதட்டைக் கடிப்பது எனக்கு நன்றாக நினைவிலிருந்தது. அவளிறந்து இருபது வருடத்திற்கு மேலிருக்கும். இத்தனை நாட்களில்லாது இன்றெப்படி திடீரென்று வந்தாள் என்று எனக்கு ஆச்சர்யமாய் இருந்தது.

ஏன் வந்தேன்னு கேக்குறியா என்றாள் பெரியம்மா. எனக்குத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. பயத்துடன் பார்த்தேன்.

நான் எங்க போவேஞ் சொல்லு. இந்த வீட்டை விட்டா எனக்குப் போக்கிடமேது. இங்கனதான் இருப்பேன். யாரு சொன்னாலும் போக மாட்டேன் என்ற பெரியம்மா மீண்டும் கீழுதட்டைக் கடித்து வாய்க்குள் வைத்துக் கொண்டாள்.

ஒன்னய யாரு போகச் சொன்னா. இங்கேயே இரு ராஜாத்தி என்று ஆச்சி ராஜாத்தியக்காளிடம் பேச ஆரம்பித்து விட்டாள். அப்பாவுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. எந்தத் தகப்பனுக்கு, தான் செல்லமாய் வளர்த்த மூத்த பெண் பிள்ளையை சட்டென்று நோய்க்குத் தூக்கிக் கொடுக்க மனசு வரும். கண்களில் நீர் வடிய இடுப்பு வேட்டிக்கு மேல் கட்டியிருந்த துண்டால் வாய்பொத்தி வாசலுக்கு விரைந்தார். பெரியம்மா பேசிக் கொண்டேயிருந்தாள்.

நாம போயிட்டேன்னு என்னைய மறந்துரலாம்ன்னு பாத்தியளா. அப்படில்லாம் விடமாட்டேன். அம்மா எனக்குப் பசிக்குதும்மா.. எனக்கு இங்கே சாப்பாடே இல்லைம்மா. ரொம்பப் பசிக்குதும்மா

அம்மா ஓவென்று வாய்விட்டு அழுதாள். ஆச்சிதான் சாமி கும்பிட செய்து வைத்திருந்த வடையிலிருந்து இரண்டை எடுத்து பெரியம்மாவின் கைகளில் தந்தாள். பெரியம்மா தன் வலக் கையால் இரண்டு வடைகளையும் வாங்கி அப்படியே ஒரே நேரத்தில் இரண்டையும் வாயில் திணித்துக் கொண்டாள். அப்படி செய்ததில் கொஞ்சம் சிதறி கீழே விழுந்தது. பெரியம்மமாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரமணியக்கா அதை எடுத்து கைகளுக்குள் பொத்திவைத்துக் கொண்டாள்.

ஆச்சிதான் வழக்கம் போல பெரியம்மாவிற்கு



பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். யாரு ஒன்னய மறந்தா.. நீதான இந்த வீட்டுக்கு தெய்வம். ஒன்னய யாராச்சும் மறப்பாகளா..

மறந்துட்ட. என்னிக்காச்சும் எனக்கு பாவாடை சட்டை வாங்கித் தந்தியா. இங்க பாரு ஏஞ்சட்டையெல்லாம் சின்னதாயிருச்சு. பழசாப் போச்சு. பழசை எப்படி கட்டிக்கிறது சொல்லு. புதுசுதான் கட்டிப்பேன். வாங்கித் தாரியா..

கண்டிப்பா வாங்கித் தாரேன் ராஜாத்தி.



இப்போது பெரியம்மாவின் கண்களில் கண்ணீர் மீண்டும் தாரை தாரையாய் கொட்டிற்று. வருஷாவருஷம் வாங்கித் தரணும். பொங்கலுக்கு. மீண்டும் ராஜாத்தி அக்காள் உதட்டைக் கடித்தாள்.

வாங்கித் தாரேன் முதன் முறையாய் அம்மா அழுகையுனூடே பேசினாள். அம்மா பேசியதைக் கேட்டதும் பெரியம்மா கண்ணீர் வழியும் முகத்துடன் சிரிப்பதைப் போல தோன்றியது. அம்மா வந்து பெரியம்மாவின் கைகளை இறுக்கப் பற்றிக் கொண்டாள். பெரியம்மாவும் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். நீ கவலைப் படாதே. ரமணி கல்யாணந்தானே.. எல்லாம் நல்ல படியா நடக்கும். சீக்கிரமே நடக்கும். பெரியம்மா தான் சொன்னாள். ரமணியக்கா தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள். அம்மா ரமணியக்காவை கூப்பிட்டு பெரியம்மாவை விழுந்து வணங்கும்படி சைகை காட்ட அக்கா வந்து வணங்கினாள். பெரியம்மா சரி என்பது போலத் தலையை ஆட்டினாள். பின் கையை நீட்டினாள். ஆச்சி திருநீற்று மரவையை எடுத்துநீட்ட, அதை வாங்கிக் கொண்டாள். வலக்கையில் குத்தாக திருநீற்றை அள்ளி ரமணியக்காவை கையை நீட்டச் சொல்லி தந்தாள். பின் தன் கையில் ஒட்டியிருந்த திருநீற்றை அவள் நெற்றியிலிட்டாள். அடுத்து அம்மா என்னைப் பார்க்க நானும் வணங்க எனக்கும் திருநீறிட்டாள். அம்மாவும் ஆச்சியும் வாங்கிக் கொண்டார்கள்.

பெரியம்மா கண்ணைத் திறக்கவேயில்லை. தலையை இங்குமிங்கும் திருப்பினாள். அது யாரையோ தேடுவது போல இருந்தது. ஆச்சிதான் என்ன வேணும் என்று கேட்டாள். அதற்கு பெரியம்மா எங்க காணோம் என்று கேட்டாள். எல்லாரும் இருக்கோம்ல்ல யாரைக் காணோம் என்றாள். அதற்கு மீண்டும் பெரியம்மா எங்க காணோம் என்றாள். அப்போது தான் அவள் அப்பாவைத் தேடுகிறாள் என்று தெரிந்தது. நான்தான் அப்பாவைத் தேடி வாசலுக்கு வந்தேன். அப்பா அழுது முடித்திருந்தார். கண்ணெல்லாம் வீங்கிக் கிடந்தது. பெரியம்மா கூப்பிடுவதாகச் சொன்னதும் எழுந்து வந்தார். அப்பாவைப் பார்த்ததும் பெரியம்மா

ரொம்ப தாகமா இருக்கா.. என்று கேட்டாள். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. மீண்டும் ம்.. ரொம்ப தாகமா இருக்கா .. என்று கேட்டாள்.

இங்கனதான் இருக்கேன். எங்கயும் போக மாட்டேன். எல்லாரையும் பத்திரமா பாத்துப்பேன். கவலைப் படாம இருக்கனும். யாருக்கும் எந்த கெடுதலும் வராது. எனக்குத் தான் தாகந்தாகமா இருக்கு. தவிக்க விடாம பாத்துக்க. உனக்குந் தாகமா இருக்கா சொல்லு. இல்லேல்ல.. அப்புறம் ஏன். நான் இங்கனதான இருக்கேன். மாட்டேன்னு சொல்லு. மாட்டேன்னு சொல்லு. என்று அப்பாவைப் பார்த்து பெரியம்மா சொல்லிக் கொண்டே இருந்தாள். அப்பா அழுதார். கண்ணீர் விட்டபடி பெரியம்மாவின் காலில் விழுந்தார்.

மாட்டேன். இனிமே குடிக்க மாட்டேன். ஓம்மேல சத்தியமா இனிமே குடிக்க மாட்டேன். என்று அழுது கொண்டே சொன்னார் அப்பா. பெரியம்மா மரவையிலிருந்து கைப்பிடி அளவு திருநீறு அள்ளி அப்பா கையில் திணித்தாள்.

பெரியம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிவது நின்று போனது. சற்று நேரத்தில் பெரியம்மா மண்டியிட்டு விளக்கை வணங்கினாள். ●



மன்னிப்பு

பள்ளிச் சீருடையைக்கூட மாற்றாமல்
அம்மாவிடம் அடம்பிடித்து முதல்முறையாய்
தோட்டத்தில் பூப்பறிக்க சென்றவனிடம்
சொல்லியனுப்பினாள், கூடை நிறைய
பூக்களைப் பறித்துவா என்று.

வண்ணவண்ணமாய் பூத்துக்குலுங்கும்
பூக்களை பறிக்க மனமில்லாமல்
உதிர்ந்தப் பூக்களை
சேகரிக்கவும் தயங்கினான்.

தரையில் விழுந்தப் பூவை
சாமிக்கு வைக்கக் கூடாதென
என்றோ அவன் அம்மா சொன்னது
நினைவுக்கு வந்தது.

அம்மா சொல்லைத் தட்டாமல்
கூடை நிறைய பூக்களை
கொண்டுவந்தவன் பூசை முடிந்தவுடன்
அம்மாக்கு தெரியாமல்,
இறைவனிடம் மட்டும்
மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

ஏனென்றால் அந்த பூக்கள்
பறித்தவையல்ல உதிர்ந்தவை.!

– சகி

முருகன் ஸ்டிக்கர் ஒட்டிய டி.வி.எஸ்-50

பின்பக்க நம்பர் பிளேட்டின் மத்தியில்
பழனி முருகன் ஸ்டிக்கர் ஒட்டிய,
பழைய டி.வி.எஸ்-50 வைத்திருக்கும்
கொத்தனார் வேலை செய்யும்,
ஆறுமுகத்தை எனக்கு மிகவும் பரிச்சயம்...

வேலையில் கெட்டிக்காரன்தான்.
ஆனால், கூலி வாங்கியவுடன்
அந்த வண்டி எங்கே போய் நிற்கும்
என்பது எனக்குத் தெரியும்.

இப்போது கூட,
நான் வீடு திரும்பும் வழியில்
முருகன் ஸ்டிக்கர் ஒட்டிய அந்த டி..வி.எஸ்-50
மெயின் ரோடு டாஸ்மாக் கடை வாசலில்
நின்றுகொண்டிருந்தது.

ஆறுமுகத்தின் வீட்டைக் கடக்கும் போது
ஓலைத் தட்டி வேலியைத் தாண்டிய
ஆறுமுகத்தின் எட்டு வயது மகள் ஆனந்தியின் விழிகள்
ஏக்கத்துடன் வீதியின் முனையை நோக்கியவாறிருந்தன.
முருகன் ஸ்டிக்கர் ஒட்டிய
அந்த டி.வி.எஸ்-50-க்காய் இருக்கலாம்.

– சா.நாதன் ரவிகுமார்



கட்டுரை

சிவசு



ஆதித் தமிழியத் திறனாய்வு (உடனுறை)

ஆதித் தமிழ்த் திறனாய்வு உத்திகளை, தொல்காப்பியம், மூன்றாம் அதிகாரத்தில் பலபட விவரிக்கிறது. நூற்பா ஒன்றில், செய்யுளின் மேலோட்டமான அர்த்தத் தளத்திற்குக் கீழாகவுள்ள உள்ளுறை அல்லது ஆழ்உறைப் பொருளை வெளிப்படுத்தக் கூடிய நூற்பா ஒன்று வருகிறது.

"உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே"

உடனுறைகின்ற பொருள் பற்றி விளக்கிவிட்டு, தற்கால இலக்கியங்களில், அதன் பயன்பாட்டைக் கூறலாம்.

செய்யுள் என்று முன்பு வழங்கப்பட்ட படைப்பு இலக்கியத்தை, சிறுகதை, நாவல், நாடகம், தற்காலக் கவிதை என்று முதலில் விரிவுபடுத்திக் கொள்வது அவசியம்.

'உடனுறை' உத்தியானது செய்யுளில் இரு தளங்களை வெளிப்படுத்தியமையை உரையாசிரியர்கள் ஒரு பாடல்வழி கூறியுள்ளார்கள்.

இளம்பூரணர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர். ஆணும், பெண்ணும் தன் காதலை, ஒரு புன்னை மரத்தடியில் பகிர்கிறார்கள். தலைவியான அப்பெண், ஆணிடம் (தலைவன்) சொல்லாமல் கொள்ளாமல், போய்விடுகிறாள். மறுநாள் தன் காதலியைச் சந்திக்கிறவன், காரணத்தைக் கேட்கிறான். அவளின் பதில் உரைநடையில்.

தோட்டத்தில் சில பெண்களோடு, கிச்சுக்கிச்சுத்தாம்பாள விளையாட்டை, புன்னைக் கொட்டை, மணலில் மறைத்து, கையில் மூடி, பின் கண்டுபிடிக்கும் முறையில் ஆடுகிறாள். மண்ணில் புதையுண்ட புன்னைக் கொட்டை முளைக்கிறது. தாய் தனக்குத் தரும் பால், நெய் போன்ற உணவினைப் பகிர்ந்தளித்த செடி, புன்னைமரமாகிவிட்டது. செடிமேல் தான் செலுத்திய பாசத்தைப் பார்த்த தாய், புன்னையைத் தங்கைபோல் வளர்க்கிறாயே! என்று சொன்ன சொல் நினைவில் ஆடியது. தங்கை பக்கத்தில், தன் காதலனோடு உரையாட நாணம் தடுத்ததால் ஓடிவந்துவிட்டேன் என்கிறாள்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஆண், பெண், பெண்ணின் தாய் என்ற மூன்று கதைமாந்தர்களோடு அணைந்தே வரும் ஒன்று 'புன்னை மரம்'. புன்னை மரம்தான் உடனுறையாகும்.

இந்தச் செய்யுள் மேல் தளம் (மேலுறை) அடுத்ததான உள்தளம் (ஆழ்உறை) என இரண்டு அடுக்குகளால் நிறைந்துள்ளது.

மேல்தளப் பொருள், மணமாகுமுன்னரோ, ஆன பின்னரோ, ஒரு பெண் தான் விரும்புகிறவனை அல்லது கணவனைப் பிற பெண் பார்க்கக்கூடிய சூழலில் சந்திக்க மாட்டார்கள். கற்பு, நாணம் போன்ற பெண்களின் தன்மைகள், அவர்களுக்கு உயிரைக் காட்டிலும் மேலானது என்பதாகும்.

அடுத்த அடுக்குப் பொருள், அந்தப் பெண், புன்னை மரப்பக்கம் செல்லும் போதெல்லாம், தாயும் தென்படுவாள். அதனால்தான் 'தங்கையாக வளர்க்கிறாள்' என்ற பாராட்டு வெளிப்படுகிறது. இப்போது, தலைவி புன்னை மரப்பக்கத்தில், தலைவனோடு நிற்கிறாள். தன் தாய் எப்போதும்போல் வந்து விடுவாள். தாயின் பழிச் சொல்லுக்கு ஆளாக வேண்டி வருமே எனப் பயத்தினால் உள்ளே செல்கிறாள்.


மேலடுக்கில் தாயின் பாராட்டல், உள்தளத்தில் தாயைப் பற்றிய பயம். வாசித்த உரையாசிரியரின் பன்முக வாசிப்பை இளம்பூரணர் வெளிப்படுத்தியுள்ளார்.

கூடவே வரும் பொருள்	யாருடன் நிற்கிறார்கள்	வெளிப்படும் மனஉணர்வு
புன்னை மரம்	தலைவன்	சந்தேகம்
புன்னை மரம்	தலைவி	மகிழ்ச்சி(தாயின் பாராட்டு)
புன்னை மரம்	தாய்	பாசவுணர்வு
புன்னை மரம்	தலைவி	பயம்(அச்சம்-தாய் வருவாள் என)
புன்னை மரம்	தாய் கண்டால்	கோபம் (வெகுளி)
புன்னை மரம்	தலைவன்	தெளிவு

மேலுறையாகவுள்ள செய்யுளின் அர்த்தத்தன்மை, ஆழுறையாகவுள்ளதிற்கு எதிர்நிலையில் உள்ளது.

2018 ஜனவரி மாதத்தில் எதிர்கொண்ட தற்காலச் சிறுகதைகள், கவிதைகளோடு 'உடனுடைறப் பொருளின் பயன்பாட்டை உடனிறுத்திப் பார்ப்பதால், புதிய பொருண்மைகள் கிடைக்கலாம்; வாசக அனுபவத்தை விரிக்கலாம்.

வண்ணதாசனுக்கு 2016-ஆம் ஆண்டில் தமிழுக்கான சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. அவருடைய முகநூல் கவிதை ஒன்றை தினமணி நாளிதழ் வெளியிட்டிருந்தது. அக்கவிதை சிலாகிக்கக்கூடியதாக அமைந்திருந்தது.



"உன் வீட்டுப் போதிமரம்
முருங்கைக் காய் காய்க்கிறது.
என் வீட்டுப் போதிமரம்
வேப்பம் பூ உதிர்க்கிறது.
அவன் வீட்டுப் போதிமரம்
புறம்போக்கு நீர்க்கருவை
இவள் வீட்டுப் போதிமரம்
கிளி காய்க்கும் இலவ மரம்.
எல்லோரும் நிற்பதுவோ
நிழலில்லாப் பாலைவனம்."

தன்மை (நான்), முன்னிலை (உன்), படர்க்கை (அவன், அவள்) என்று மூவிடங்களிலும் கவிதை தன் சிறகுகளைப் பறக்கவிட்டுள்ளது.

காய்க்கிறது; பூக்கிறது போன்ற பதங்கள், இறந்த, நிகழ், எதிர் காலங்களில் நிகழ் காலத்தைச் சுட்டியுள்ளது.

முதலில் பெயரிடப்படாத மூன்று ஆண்; ஒரு பெண் கவிதையில் வலமிட்டுள்ளனர்.

நான் கதாபாத்திரங்களோடும் தொடர்புபடுத்தப்பட்ட 'உடனுறைப் பொருள் மரம்.

மரத்திற்குத் தரப்பட்டுள்ளது 'போதி' அடைமொழி. 'போதி' என்பது, போதிமரத்தில் ஞானம் பெற்ற புத்தனை நம் நினைவில் நுழைக்கிறது. பௌத்த மதம்; கொள்கைகளால் பிளவுண்ட அதன் கிளைகள் நமக்குள் வருகின்றன.

உள் முரண்பாடுகள் பிரிவுகளை ஏற்படுத்தின. வெளி முரண்பாடுகள் சமணம், சைவம், வைணவம் என்று பிற புற மதங்களையும் நமக்குள் புகுத்துகின்றன.

உடனுறைப் பொருள்	- மரம்
அடைமொழி	- போதி
போதி	- பௌத்தம் x உட்பிரிவுகள் - அகம்
	- பௌத்தம் x சமணம், சைவம், வைணவம் - புறம்

பொதுமக்கள் புத்தியிலும் இச்சொற்கள் புதைந்துள்ளன. ஒருவர், புதிய யோசனை / கருத்தைச் சட்டென ஒப்புக்கொள்ளாத சபையில் சொல்வாரானால், கேலியாக,

‘போதிமர ஞானம் சொல்லுது’ என்று கிண்டலடிக்கிறதையும் கேட்கலாம்.

‘போதி’ அடைமொழி மதப் பின்புலத்தில் ஞானத்தைக் குறிப்பது பொதுப் புத்தியில் ‘கிண்டல்’ தொனியாகவுள்ளது. ஒன்றின் சார்பாளர்கள் சார்பற்றவர்கள் இருவரிடையேயும் முரண்பட்ட பொருண்மைத் தளத்தில் உலவுகிறது.

மரமென்பதும் காலப் பின்னணியில், வெகுகாலத்திற்கு முன் மண்ணில் புதையுண்டது, பின்னர் பல கனிமங்களாக உருப்பெறுகிறது. நிகழ்காலத்தில், கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாதவர்களை, ‘மரம் மாதிரி’ நிற்கிறாயே என்றும் சொல்கிறார்கள். கவிதையில் வருகிற ‘மரம்’ பூக்கிற, காய்க்கிற நிகழ்காலத்தைச் சார்ந்தவை.

காலப் பின்பலத்தைக் கணக்கில் எடுத்தால், கவிதை குறிக்கும் ‘மரம்’ கிண்டல் தொனியோடானது எனவும் சொல்ல முடியும்.

‘போதிமரம்’ என்ற இருபதச் சேர்க்கை, பொதுமக்கள் புத்தியில் இடம்பெற்றுள்ள, ஒரு செய்தியைச் சொல்கிறவனை நக்கலடிப்பதாயுள்ளது என்றும் முன்வைக்கலாம். இதில் இடம்பெறும் ‘உயர்திணை எதிரிணைகளை’ இப்படி வைக்கலாம்.

உன் x என்	- ஆண் கூற்று ஆணை நோக்கி.
	முன்னிலை x தன்மை
அவன் x இவள்	- ஆண் கூற்று ஆண் பெண்
	சேய்மை x அண்மை
முருங்கைப் பூ	x வேப்பம் பூ
நீர்க்கருவை	x இலவ மரம்
விறகு	பஞ்சு பாதுகாக்கப்படுவது
முள்	- பராமரிப்பற்றது

முருங்கைப் பூவும், வேப்பம் பூவும் காய்களாக மாறும்போது உணவுப் பொருளாகிறது; விதைகளாகவும் ஆகின்றன. பணமாக்கவும் கூடிய பணப்பயிர்களாக உள்ளன.

முருங்கை மரம் எளிதில் முறிந்துவிடும்.

வேப்ப மரம் முறிக்கவியலாத, கடினத் தன்மையானது.

இனி, கவிதையின் முதல் தளத்தில் நடக்கலாம்.

கவிதை சொல்லியின் வீட்டிலுள்ள வேப்பமரம், வேப்பம் பூக்களோடு காட்சியளிக்கிறது. மற்றவனானவன் வீட்டிலுள்ள முருங்கை மரம் முருங்கைப் பூவுடன் தெரிகிறது.

வேறொருவன் வீட்டிலுள்ளது, யாருக்கும் உடைமையில்லாத நிலத்தில் தான்தோன்றியதாக வளரும் நீர்க்கருவை மரம். அதிலும் பூக்கள் மலர்ந்திருக்கலாம். சொல்லவில்லை.

நீர்க்கருவை மரப்பூக்களில் ஒரு மௌனம்.

அருகிலுள்ளவளின் வீட்டிலுள்ள மரமோ, இலவ மரம். இலவ மரப் பூக்கள் விரியும் என்று அம்மரத்தில் அதற்காகக் காத்திருக்கின்றன கிளிகள். பூக்களின் எண்ணிக்கையைவிட, கிளிகளின் தொகை மிகுதி என்பதை ஓர் இடைவெளிகாட்டி கவிதைக்கு உயிர்ப்பு கொடுக்கிறது.

கவிதையில் இரண்டாம் அடுக்கில் நுழையலாம்.

எல்லா மரங்களின் அனைத்துப் பாகங்களும், உலகின் பிற உயிர்களுக்கு உபயோகமாய்த்தான் இருக்கும். இக்கவிதையிலும், முருங்கை, வேம்பு, நீர்க்கருவை, இலவமும் அவ்வாறுதான் மரங்களுக்கிடையே நிலவுகின்ற ஒற்றுமை ‘பயன்பாடு’ தன்மையானதென்பதே.

முருங்கை, வேம்புவின் பூக்கள் கவிதையில் வந்திருப்பது இரு மரங்களின் ஒன்றினதைப் புலப்படுத்தும்.

நீர்க்கருவையும், இலவமும் ஒன்றுபோல் இல்லை. அவற்றிற்கிடையேயான வித்தியாசங்களும் வெளிப்படையாகவும் கூறப்படவில்லை.

பாடலின் கருத்தை, பாடல் முழுவதையும் ஒருசேர இணைத்திருப்பது ‘மரம்’ என்ற வஸ்துவைக் குறிக்கும் சொல்தான்.

‘மரம்’ தரும் பல தளங்களை அறிய அதனைப் பல கோணங்களில் நாட வேண்டும்.

இயல்பு நோக்கு: முருங்கை மரம், பலமானது அல்ல. வேகக் காற்றும், சிறிய அளவில் அரிவாள் வெட்டும், முருங்கையைச் சாய்த்துவிடும். காய்ந்துபோன முருங்கை, விறகு எரிக்கவும் பயனாகும் என்று சொல்ல முடியாது.

வேம்பு மேல் தோற்றப் பட்டை, சொரசொரப்பானது. உள்ளும் புறமுமாக, பலத்தன்மை உடையது. விறகு எரிக்கவும், மரம் பொருட்கள் உற்பத்திக்கும் பயனாவது.

நீர்க்கருவை, அதுவாகவே வளர்வது. வீடுகளில் யாரும் வளர்ப்பதில்லை. ‘இளைதாக முள்மரம்’ என்பதும் நினைவில் வருகிறது. ஆனாலும், பெரிதானவுடன் நிழலுக்குக் கீழே ஒதுங்கலாம்.

இலவ மரம், காயானவுடன், வெடித்து, உள்ளிருக்கும் பஞ்சைக் காட்டும். பழமாகாததால், பறவையினங்களை ஏமாற்றும் தன்மையது என்பதை ‘இலவு காத்த கிளிபோல’ என்ற சொலவடை நினைவூட்டும்.

பயன் பார்வை : முருங்கைப் பட்டை, மருத்துவப் பயனுடையது. உடலின் புறவீக்கத்திற்கு அரைத்துத் தடவுவார்கள். முருங்கைப் பூ உணவுப் பொருள். காயைத் தனியாகவும், பிற உணவுப் பொருளுடனும் சேர்க்கையில் மணம் கூட்டும். ‘முந்தானை முடிச்சு’வில் நடிகர் பாக்யராஜ் முருங்கைக் காயை விசேடித்திருப்பார்.

வேப்பம் பூ, காய், இலை, பழம் கசப்புத் தன்மையது. இளம் தளிர்களைச் சவைத்து இறக்குவது நீரிழிவைக் குறைக்கும்

கொண்டாடும் சிறகுகள்!

இவ்வளவு
தூரம் பறந்ததாகவோ...
இன்னும்பறப்பதற்கு
தூரமிருப்பதாகவோ...
எந்தப்பறவையும்
நினைத்ததேயில்லை...!
பறப்பதை
கொண்டாடுகின்ற
சிறகுகளில்
பாரமிருப்பதேயில்லை...

எஸ்.வீ.ராஜன்



கண்ணாடியின் மரண வாக்கு மூலம்!

பின்புறம் தொலைவில் வரும்
மனிதர்களை அருகில்
பார்வைப்படுத்தும்
ரியர் வியூ மிரர்கள்.
முன்புறம் அருகில் இருக்கும்
மனிதர்கள் தூரமாகிப் போகிறார்கள்
கண்களுக்கு.
உண்டாக்கப்பட்டது உயரமாயும்
உருவாக்கியவை நிழலற்றும்.
வளைவில் திரும்பும் பொழுதும்
வாகனத்தை நிறுத்தும் பொழுதும்
பின்னால் பார்க்கும் கண்கள்.
பயணம் நிற்கும் பொழுது
பார்வை தெளிவடைதல்
வெண்ணெய் திரண்டாலும்
கலயம் விரிசலில்...
கண்ணாடி உடைந்தாலும்
உருவங்கள் சிதறவில்லை.
கண்கள் உடைந்தால்
இரத்தம் வழிந்தோட
கலயத்தின் வெண்ணெய்யாய்
பார்வைகள் மிதிபடுகின்றன.
புதிய வாகனத்தில்
இரண்டாக இருந்த கண்ணாடி
போகப் போக ஒன்றாகி
இன்று இல்லாமல் இருப்பதால்
மனிதர்கள் தூரமாகிக் கொண்டே போவது
தொடர் கதையாவதில்
கண்களுக்கு எந்தத் தொடர்புமில்லை
என கண்ணாடியின்
மரண வாக்கு மூலம் பதிவு செய்யப் பட்டு
ஒரு வழக்கு முடிக்கப் பட்டது.
செத்துப் போன கண்ணாடியுடன்
யாரும் எதுவும் பேசாததால்
அது ஊமை என்று
இன்று வரை யாருக்கும் தெரியாது.

– காரைக்குடி சாதிக்.

வேம்பங்கொட்டையின் எண்ணெயும் மருத்துவர்களுக்குப் பயன்படும்.

நீர்க்கருவை புறம்போக்கு நிலங்களில் ஒருகாலத்தில் அரசாங்கத்தாரால் வளர்க்கப்பட்டன. வாழ்வாதாரத்திற்காக, ஏழை மக்கள் வெட்டி விறகாக்கி ஊர்ப்புறங்களில் விற்றுப் பிழைக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இலவம் பஞ்சு, பணங்காய்ச்சி மரம். மெத்தையில் பஞ்சு தயாரிப்பு பொருளாக இருக்கிறது.

‘காலம்’ சுட்டி : பாரம்பர்யமாக, முருங்கை மரம், பங்குனி, சித்திரையில் காய்க்கும்.

வேப்பம் பூக்களும் கோடை காலத்தைச் சார்ந்தவைதான். வேப்பம் கொட்டைகள் வெயில் காலத்தில் பொறுக்கப்படுகின்றன.

நீர்க்கருவையும் வெப்பந்தாங்கிகள். நிலத்திலுள்ள நீரை உறிஞ்சும்.

இலவம், தன் காய்களை கோடையில் வெடிப்புற வைக்கும்.

பாலைவனம், விடிகாலையிலும் வெக்கையைக் கொட்டும்.

‘காலம்’ பகலவன் வெயில் அனலாக வீசும் வெயிற்காலம்.

‘இடம்’ புலப்படுத்தம் : முருங்கை மரத்தை, வீட்டின் முன் வளர்க்க மாட்டார்கள். கொல்லைப் புறந்தான் அதற்கு வளர்விடம். தேரிக்காடுகளில் முருங்கை மிகுதியாயுள்ளன. வேம்புவும், நீர்க்கருவையும், இலவமும் வீட்டுக்காரர்களால் விரும்பி வைக்கப்படுவதில்லை. காட்டுப் பகுதி மரங்கள்.

முதலிலிருந்து இறுதிக்கு : கவிதை முதலில் முருங்கை மரத்தில் ஆரம்பித்து, வேப்ப மரத்தில் தாவி, நீர்க்கருவையைக் காட்டி, கிளியை ஏமாற்றும் இலவ மரத்தைச் சொல்லி, படித்த வாசகன், படைப்பாளி எல்லோரையும், மரமல்லா மணலில் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது.

நான் கசப்பாயிருப்பவன்தான் / பவள்தான்

நீ முருங்கையின் காய் போல, பிறரைச் சார்ந்தே பரிமளிப்பவன்/வள்.

அவன் /ள் சார்ந்தோரை உறிஞ்சுபவன்/ ள்.

இவள் தோற்றங்காட்டி ஏமாற்றுபவள்.

எல்லோரும் நிற்பதும், நினைப்பதும் கானல் நீராய்த் தெரியவரும் பாலைவன வெயிலால் ஏமாற்றப்படுகிறோம்.

மேலுறையிலுள்ள பொருள் : மண் என்ற ஐம்பூதங்களில் தொடுதலுக்குட்பட்ட ஒன்றாலும், தொடுகைக்குள் ஆட்படாத நினைவுக்குள் மட்டுமே செயல்படும் காலத்தாலும், மரம் தோன்றி, மனிதத்திற்கு நம்பிக்கை ஊட்டியோ அல்லது எதிர்மறையானதைக் கொடுத்தோ காட்சிதரும். கடைசியாக, எல்லோரும் மரமே இல்லை என்று சொல்லப்படுகிற, பாலையில்தான்.

மரமென்பது, வாழ்க்கை, ஒருவன் நம்பிக்கை, இப்படி வாசிக்கிறவனின் மனோநிலைக்கேற்ப, பல அர்த்தங்களை நல்கும் குறியாய், அதாவது மிதக்கும் குறியாய் (*Floating Sign*) கவிதையில் வலம் வருகிறது.

கவிதை ஆரம்பித்து, முடிவு நோக்கி வாசிப்புப் பயணத்தில் விரக்தி, வேதனை, அவநம்பிக்கையைப் புலப்படுத்துகிறது.

இறுதியில் தொடங்குபவன், முதலை நோக்கி நடந்தால், வாழ்க்கையின் சகல கடினங்களையும் கடந்து, எளிமையான நிலைக்குச் செல்லலாம்.

மேலாகத் தெரியும் பொருளுக்கு, மாற்றான ஒரு வேறு அர்த்தத்தை ஆழுறையாகப் பெறமுடியும்.

‘போதிமரம்’ என்ற சொற்சேர்க்கை, கேலி, கிண்டல் தரும் வகையில் கவிதையில் கையாளப்பட்டுள்ளது.

வயதாகிய மனம்; உடலையும் உள்ளத்தையும் உருத்தும் பிணி (ஓவாப்பிணி) மனதுள் தோன்றிய வருத்தம், தனக்கேயான மென்மைத்தனம் இந்த நான்கு நிலைத் தளமாகக் கொண்டு, இளிவரல் என்னும் சுவை ஏற்படும் என்ற இன்னொரு திறனாய்வு உத்தியைக் கொண்டு, மூப்பு, பிணி, வருத்தம், மென்மைக் கூட்டு மனஉணர்வைப் படைப்பாளி இந்தக் கவிதையை எழுதியிருக்கக் கூடும் என்றும் அனுமானிக்க வாய்ப்பிருக்கிறது. ●

இந்தக் கட்டுரை பேராசிரியர் ‘மேலும்’ சிவசு எழுதி ‘மேலும்’ வெளியீடாக வெளிவந்த ‘ஆதித் தமிழியத் திறனாய்வு (உடனுறை)’ நூலில் இருந்து ஒரு பகுதி...

‘கண்ணாடிக்குள் சிரித்த காலம்’

(கவிதைத் தொகுப்பு)

காட்சிகள் எல்லோருக்கும் சொந்தமானவைதான். ஆனால் வாழ்வில் தென்படும் அல்லது எதிர்ப்படும் பலவிதக் காட்சிகள் காணும் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு விதமான எண்ணங்களை உருவாக்குகின்றன. சற்றே கற்பனை உள்ள மனதென்றால் அவை கவிதைகளாகவோ அல்லது வேறுவிதமான இலக்கிய வடிவங்களாகவோ வெளிப்படுகின்றன.

அத்தகைய வெளிப்பாடுகளே கவிஞர் கீர்த்தியின் ‘கண்ணாடிக்குள் சிரித்த காலம்’ என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள அத்தனைக் கவிதைகளும்.

நம்மில் பலரும் காணும் ஒரு காட்சி அவரது பார்வையில் வித்தியாசமான சிந்தனையை உருவாக்கியுள்ளது ஒரு கவிதையில் –

முதலில் / சாமி உண்ணட்டும் என்று
குழந்தையும் / குழந்தை உண்ணட்டும் என்று
சாமியும் / பரஸ்பரம் காத்து நிற்கின்றன
படையலின் முன்பு / எச்சில்படுத்தக் கூடாது
என்ற யாரோ ஒருவரின் / எச்சரிக்கைக்குத் தயங்கி.

கவி மனதின் கற்பனைக்கு எல்லை ஏது? வறண்ட கிணறு; ஆனால் வற்றாத கற்பனை இன்னொரு கவிதையில்.

தன் நீரை / தானே பருகிக் கொண்டது
தொண்டை வறண்டுபோன கிணறு / கோடையில்.

‘கண்ணாடிக்குள்
சிரித்த காலம்’
(கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: கீர்த்தி.
வெளியீடு:
நிவேதிதா பதிப்பகம்,
சென்னை.
விலை: ரூ.70/-



குழந்தை மனதின் கற்பனையாய் விரிகிறது இன்னொரு கவிதை –

வியர்வை வழிய / சைக்கிளை மிதிக்கும் தந்தையைக்
களைப்பாற்றிக் கொண்டிருக்கிறது / முன்கம்பியில் அமர்ந்திருக்கிற
குழந்தையின் கையில் சுழன்று கொண்டிருக்கும்
பொம்மைக் காற்றாடி .

நாம் இழந்து கொண்டிருக்கும் இயற்கை வளம் குறித்த வேதனை கலந்த வரிகள் –

படித்துறைகளால் / அடையாளப்பட்டுக் கொண்டிருக்கிறது
நீரற்ற அந்த நதி .

இடை இடையே வாழ்வின் சில முரண்களை பகடியாக்கிக் காட்டுகின்றார் சில கவிதைகளில்–

நிதானமாய் / தேட முடியாத
அவசரப் பொழுதுகளில்
சாமி படம் பொறித்த / பைதான் அகப்படுகிறது
மாமிசம் வாங்கிவர .

குழந்தையின் செயலைக் கவிதையாக்கும் வித்தை வசப்பட்டுள்ளதை உணர்த்தும் ஒரு கவிதை –

தலைகீழாகத் தான் பிடித்த
கவிதைப் புத்தகத்தைப் படிப்பதாய்
குழந்தை செய்யும் பாவனையில்
தெரிகிறது / தலைகீழாய் நின்றேனும்
தன்னைப் படிக்கச் சொல்லி
குழந்தையிடம் மன்றாடும்
கவிதையின் பாவனையும் .

வாழ்க்கையின் யதார்த்தமான கணங்களை ஒரு இலை மூலமும், ஒரு புழு மூலமும் வாசிப்பவர்க்கு உணர்த்தும் கவிதை –

நதியில் உதிர்ந்து விழுந்த இலையில் ஒட்டியிருந்த
புழுவொன்று / தின்று கொண்டிருந்தது
இலையோடு தன் வாழ்வையும் .

வாசிப்பவர்க்கு பல பரிமாணங்களைத் தரும் பல நல்ல கவிதைகள் அடங்கிய தொகுப்பு. ●

நூல் விமர்சனம்

ஜிதேந்திரன்




ரணகளம்

கால மயக்கப் பிரதி

பிரான்ஸ் தேசத்திலிருக்கும் நாவலாசிரியர் நாகரத்தினம் கிருஷ்ணா அவர்கள், ஏற்கனவே நான்கு நாவல்களையும், ஐந்து சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். சிறந்த மொழிபெயர்ப்பாளர். பிரெஞ்சிலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து பிரெஞ்சுக்கும் ஒன்பது நூல்களை மொழிபெயர்த்துள்ளார். தற்போதைய நாவல் 'ரணகளம்'.

1. எழுத்தாளன் தான் வாழும் காலத்தின் குரல். சமூக வளர்ச்சியையும், சமூக அவலங்களையும் பதிவுசெய்பவன். சமகாலப் பிரச்சனைகளைப் படைப்புகளில் நேரடிப் பிரதியாகச் சொல்லுதல் இயலாது. நேரடிப் பிரதி எனில், படைப்பாளி புறத் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். வரலாற்றைப் புனைவாக மாற்றி எழுதலாம். வரலாற்றில் புனைவும் இருக்கும். புனைவிலும் வரலாறு இருக்கும். நேற்றைய வரலாற்றில் இடங்களை மாற்றி, பெயர்களை மாற்றி எழுதலாம் என்கிறது புதிய வரலாற்றெழுத்தியல். படைப்பின் கதாபாத்திரங்கள் நிஜப் பாத்திரங்களாக உலவிடும் சூழலில், படைப்பாளன் ஒரு மறைபிரதியைத்தான் முன்வைக்க வேண்டி வரும் அல்லது படைப்பு தொட்டிருக்கும் சிக்கல், படைப்பாளிக்குமான சிக்கலாக மாறிவிடும். உதாரணத்திற்கு, மூன்றுபேர் சம்பந்தப்பட்ட வரலாற்று நிகழ்வில், மூன்று வரலாறும், மேலாக நான்காவதாக ஒரு வரலாறும் இருக்க வாய்ப்பிருக்கிறது. ஒவ்வொரு நிகழ்விற்கும் வெளிப்படுத்தப்பட்ட வரலாறு, மறைக்கப்பட்ட வரலாறு, அழிக்கப்பட்;ட வரலாறு என மூன்று கோணங்கள் உண்டு. சார்புத்தன்மை இன்றி எந்த வரலாற்றையும் எழுத இயலாது. பிரதியில், ஒரு நிகழ்வைப் பற்றிய பல கோணங்கள் பதிவு செய்யப்பட்ட பிறகே, எது எந்தச் சார்பு என்பதை அறிய முடியும்.



உண்மையில், படைப்புப் பிரதியா? வாசகப் பிரதியா? படைப்பாளியின் பிரதி குறிப்புப் பொருளாக அல்லாமல், வாசகன் குறிப்புப் பொருளைப் பெற்று, அதனை 'வாசகப் பிரதி'யாகப் பெறுகிறானா? எனில், அனைவருக்குமான ஒரே குறிப்புப் பொருளா! 50 அல்லது 100 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்படைப்பை வாசிக்கும் வாசகனுக்கு அக்'குறிப்புப் பொருள்' கிடைக்குமா? கிடைத்தால், அது படைப்பின் வெற்றி. இந்தச் சூழலில், இந்தக் குறிப்பிட்ட காலத்தில் வாழும் மனிதர்களின் மனதில் எழும் கேள்விகளை மனதிலுள்ள சந்தேகங்களைக் கிளறிவிடும் நாவல் 'ரணகளம்'.

நாவலை வாசிக்கிற அத்தனை வாசகர்களுக்கும் நாவல் சுட்டும் கதாபாத்திரங்களை எளிதில் அடையாளம் காண இயலும். கடந்த ஆண்டு, தமிழ்ச் சூழலில் வாழும் மக்களுக்கு, தமிழ்நாட்டின் அரசியல் சூழல் உவப்பாக இருந்திருக்காது. முதல்வரின் மரணம், தொடர்ந்து அடுத்தடுத்து நடந்த அரசியல் களேபரங்கள்.... எல்லாம் ரணகளம்தான். ஆனால், முதல்வரின் மரணத்தில் இருக்கும் மர்மம், மரணத்திற்கான காரியவாதிகள், காரணங்கள் எனத் தான் சந்தேகிக்கிற விஷயங்களை வெளிப்படையாகச் சொல்லிவிட முடியாத சூழலில், புனைவில் அதே போன்றதொரு 'சாம்ராஜ்யத்தை' எழுப்பி, அதில் வாசகப் பிரதியை உருவாக்குவதில் வெற்றி கொள்கிறார் நாவலாசிரியர் நாகரத்தினம் கிருஷ்ணா.

படைப்பாளியின் பிரதியில் முழுவதும் இடம்பெறும் சொல் 'அக்கா'. ஆனால், வாசகப் பிரதியில் உருவாகிடும் சொல் 'அம்மா'. அவர் எல்லோருக்கும் அக்கா/அம்மா. அம்மாவாகப் பதிந்திருக்கும் நபரை, அக்கா என விளிக்கும் ஒரே ஒரு நிஜப் பாத்திரத்தைப் புனைவாக்கி எழுதியிருக்கிறார். மறைந்த முதல்வரின் சிகிச்சை தொடர்பான மர்மங்கள், இறுகிய கட்டுப்பாடுகள், மரணம் தொடர்பாக எழுப்பப்பட்ட சந்தேகங்கள் எனக் கேள்விப்பட்ட; கிளப்பிவிடப்பட்ட செய்திகளைக் கொண்டு, ஒரு பிரதியை லாவகமாக உருவாக்கியிருக்கிறார். நாவலின் முதற்பகுதியும், இறுதிப் பகுதியும் நிச்சயம் இதை உறுதிப்படுத்தும். களத்தையும், சூழலையும், பெயர்களையும் மாற்றி, படைப்பில் வெற்றி கொள்கிறார் ஆசிரியர். கண்டுபிடிக்கப்பட வேண்டியது, அக்கா எழுதியதாகச் சொல்லப்படும் 'டைரி' மட்டுமே. உண்மையில் அப்படி ஒரு டைரி இருக்க வேண்டுமென்பது படைப்பாளியின் விருப்பம்.

கிராமத்தில் திருமணமாகாமல் இருக்கும் அக்கா, புதுச்சேரியில் மளிகைக் கடை, உணவு விடுதி, ஜவுளிக்கடை நடத்தி வரும் வயதானவருக்கு இரண்டாந்தாரமாகிறார். கணவர் இறந்ததும், அவருடைய நிர்வாகத்தைத் தான் பொறுப்பேற்றுக் கொள்கிறார். வீட்டில் வேலைசெய்யும் கனகத்தின் பேச்சைக் கேட்டே எல்லாம் நடக்கிறது. நிர்வாகம் மறைமுகமாக கனகத்தின் கையிலேயே இருக்கிறது. கலா டீச்சர் சாயலில் இருக்கும் கனகம். அக்காளைக் கவனிப்பதாகச் சொல்லி, அக்காளைக் கொல்லக் கூட்டுச் சதி செய்கிறார். எல்லாமே அக்காவுக்கு மரணப் படுக்கையில்தான் புரிகிறது. ஆனால், மருத்துவமனையில் தீவிரமான கட்டுப்பாடு, நெருக்கடி. அத்தனையையும் ஒரு டைரியில் எழுதி, சிறுவயதில் அக்காளோடு விளையாடும், ஒரு கட்டத்தில் அக்காவே மானசீகமாக கணவராக ஏற்றுக்கொள்ளும் கதைசொல்லியின் கையில் சேர்ப்பித்துவிடுகிறார்.

இந்திராகாந்தி கொலை, ராஜிவ் காந்தி கொலை என்று நாவலில் பழைய அரசியல் நிகழ்வுகள் விவரிக்கப்படுகின்றன. ராஜிவ் காந்தி கொலை நாளையும், அப்போது ஏற்பட்ட அரசியல், சமூக நெருக்கடிகளை விவரிப்பதன் மூலம், பிரதி தற்போதைய காலகட்டத்தை மறைமுகமாக விவரிக்கிறது. முன்பு இப்படி நடந்தது, இப்படி நடந்தது என்று சொல்வதன் மூலம், இப்போதைய நிகழ்வை விமர்சிக்கிறது. இது கால மயக்கப் பிரதி.

> **அன்றைய சூழல் தெரிந்தவர்கள் நாவலில் பல சுவாரஸ்யமான சம்பவங்களை அடையாளம் காண இயலும். கதையில், அக்கா ஒருமுறை மளிகைக் கடைப் படிகளில் ஏறும்போது தடுமாற, அருகில் நின்றிருந்த கரீம் (சிறுவன்) தாங்கிப் பிடிக்கிறான். அக்காளைத் தொட்டதற்காக, கணவர் அங்கேயே அவனைச் செருப்பால் அடித்து விடுகிறார்.**

அக்காள் இறந்தது 1991 மே 21 என்று குறிப்பிடப்படுகிறது. உண்மையில், அது ராஜிவ் காந்தி இறந்த நாள், கொலை செய்யப்பட்ட நாள். நாவலில் ராஜிவ் காந்தி இறப்பும், அதற்குப் பிறகான சம்பவங்களும் நேரிடையாக இடம்பெறுகின்றன. அக்காள் சிகிச்சைக்காக 'ஹிப்போகிரட்டஸ்' மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

அதே மருத்துவமனையில்தான் முன்பு, அவரது கணவரும் சேர்க்கப்பட்டிருந்தார். ஹிப்போகிரட்டஸ் என்பதில் வேறொரு ஒலிக் குறிப்பும் உள்ளது. ஹிப்போகிரட்டஸ் என்பவர் மருத்துவத்தின் தந்தை எனப்படுபவர். எனினும் சிகிச்சையளிக்கும் முன் அவர் ஒரு கிரேக்கக் கடவுளை வணங்கிவிட்டுத்தான் தொடர்வார். ஆக, ஹிப்போகிரட்டஸ் மருத்துவமனை என்பதில், வேறொரு பொருள் குறிப்பும் உள்ளது. அக்காள் குணமடைய வேண்டும் என்று அவரது நிர்வாக ஊழியர்கள், பிரார்த்தனைகள் செய்வது, வேண்டுதல் நிறைவேற்றுவது எல்லாம் நிஜத்தின் பிரதிபலிப்பு. அக்காள் குணமடைய வேண்டுகிறார்களா அல்லது அக்காள் இறந்துபோக வேண்டுகிறார்களா என்று கூறியிருப்பது பகடி.

அக்காளின் கணவருக்கு, கனகத்தின் ஏற்பாட்டிலேயே அக்காள் வசிய மருந்தைக் கொடுக்கிறார். அது 'மெல்லக் கொல்லும் விஷம்' என்பது அக்காளுக்கு மெல்லவே புரிகிறது. தனக்கும் அதே வசிய மருந்தைக் கொடுத்துவிட்டாள் என்பதும் மரணப் படுக்கையில்தான் புரிகிறது. உற்றுக்கவனித்தால் வாசகரின் பிரதியில் எந்தப் பாத்திரம் நிஜவாழ்வில் யார் என்பது புரியக்கூடும்.

அன்றைய சூழல் தெரிந்தவர்கள் நாவலில் பல சுவாரஸ்யமான சம்பவங்களை அடையாளம் காண இயலும். கதையில், அக்கா ஒருமுறை மளிகைக் கடைப் படிகளில் ஏறும்போது தடுமாற, அருகில் நின்றிருந்த கறீம் (சிறுவன்) தாங்கிப் பிடிக்கிறான். அக்காளைத் தொட்டதற்காக, கணவர் அங்கேயே அவனைச் செருப்பால் அடித்து விடுகிறார். இச்சம்பவம் தமிழக அரசியல் அறிந்தவர்களுக்கு உண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாதது.

வீட்டிலிருந்து கனகம் காணாமல் போவதும், சில நாட்கள் கழித்து மறுபடியும் கனகம் வீட்டிற்குள் வருவதும் நமக்குத் தெளிவாகப் புரிகிறது. முழுக்க முழுக்க, கனகத்தை 'வில்லி'யாக மாற்றியிருக்கிறது நாவல்; அக்காவுக்கு எதுவுமே தெரியாது என்பது போல. வாசகப் பிரதியில் இது முரணாகப் படுகிறது. அக்காளின் கணவருக்கு வாரிசு இல்லை. அக்காளைத் திருமணம் செய்தபிறகும் வாரிசு இல்லை. கனகமும், அக்காள் கணவரின் அண்ணன் மகனும் சேர்ந்து நிர்வாகத்தைப் பார்த்துக் கொள்கிறார்கள் என்று நாவல் முடிகிறது. இது ஒரு அரசியல் ரணகள நாவல்.

2. கென்ட் ஹாரூஃப் எழுதிய நாவலாக இருந்து, அதே பெயரில் திரைப்படமான *'Our souls at night'*-ஐப் பார்த்தபோதுதான், துணை என்ற சொல்லைக் குறித்து, இப்படி ஒரு நாவல் எழுதத் தோன்றியதாக ஆசிரியர் முன்னுரையில் சொல்கிறார். அடுத்தடுத்த வீடுகளில், முதுமையில், தனிமையில் இருக்கும் ஆணும், பெண்ணும் பழகுவதுதான் நாவல்; திரைப்படத்தின் கதை. அவர்களுடைய உடல், உளம் சார்ந்த வேதனைகள் ஆகியவை திரைப்படத்தில் இருக்கின்றன. அவர்களிருவரின் உறவைப் பற்றி ஊரே தவறாகப் பேசுகிறது. தனிமையில் இருக்கும் யாருக்கும் ஒரு 'துணை' அவசியமென்கிறது.

ரணகளம் நாவலில், அக்காளின் கணவர் முதல் மனைவி இறந்தபிறகு, முதுமையிலும் தனக்கொரு துணையைக் (அக்கா) தேடிக் கொள்கிறார். அவர் வேலை, வேலை என்று அலைவதனால், வீட்டு வேலைக்காரி கனகம் அக்காவுக்குத் துணையாகிறாள். அக்காள் கணவர் இறந்தபிறகு, அக்காள் கதைசொல்லியை அழைத்து (கதைசொல்லிக்கு ஏற்கனவே திருமணம் ஆகியிருந்தாலும்) தனக்கு மாலையிடச் சொல்லி, தானும் அவனுக்கு மாலையிட்டு, மானசீகமாக அவனைக் கணவனாக ஏற்றுக் கொள்கிறார். மனதளவில் 'துணை' தேடிக் கொள்கிறார். கூடவே இருக்கும் கனகத் துணை வினையாகிவிட்டதென புரிந்துகொள்கிறார்.

3. ரணகளம் நாவல் ஒருவகையில் பெண்ணிய நாவல். பெண்களின் வேதனைகளை, தவிப்புகளை, கட்டுப்பாடுகளை, அடைய வேண்டிய சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிறது. ஆணின் பலவீனத்தைப் பற்றிப் பேசுகிறது. பெண் விரும்பும் அதிகாரத்தை, அன்பை இருவழிகளில் விளக்குகிறது.

தான் வயதான ஒருவரைத் திருமணம் செய்ய, சம்மதித்ததன் காரணம் பற்றி அக்கா கூறுவது, பெண் வாழும் வாழ்க்கையைப் பதிவு செய்கிறது. அக்காளின் படிப்பு, அக்காளின் உண்ணும் பழக்கம், முதிர்கன்னி நிலைமை என எல்லாமே, பெண் ஆணை மையப்படுத்தியே இருக்கிறாள் என்பதை வெளிப்படுத்துகிறது. அக்காவின் அப்பா இறந்தபிறகு, அம்மா அடைவது சுதந்திரம் மற்றும் நிம்மதி. மகன் சுப்புராஜ் விதவைத் திருமண மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதாகச் சொல்லும்போது, அம்மாவுக்கு அப்படி ஒரு திருமணத்தைச் செய்யலாமே என்று அக்காள் சொல்கிறார். அப்போது அம்மா, "62 வயசாகிற எனக்கு 26 வயசுல ஒரு பையனைக் கொண்டு வரட்டும், சம்மதிக்கிறேன் என்றவள், சுப்புராஜ் முகம் சுளித்ததைப் பார்த்து, ஏன்டா.. உங்க பெரியாருக்கு ஒரு சட்டம்... எனக்கு ஒரு சட்டமா? எனக் கோபத்துடன் கேட்டாள். தொடர்ந்து என்னிடம், 'அடி போடீ! புருஷன் போனப்புறம் இப்பத்தான் எனக்கு விடுதலை கிடைச்சதா நினைச்சு சந்தோஷமா இருக்கேன். அதைக் கெடுத்திடாதே' என்றாள்" (ப.95) கூறுவதும் புரியும்.

கிராமத்திற்குக் கலா டீச்சரின் வருகை, பெண்ணைப் பழிசுமத்தும் பஞ்சாயத்தில் கலா டீச்சர் பேசுபவை, பெண்களின் வாழ்முறை, திருமணம் என அத்தனையையும் நாவல் அரசியல் பிரதியானாலும், மறுபுறம் பெண்ணியப் பிரதியாகவும் இருக்கிறது. கிராமத்து வீட்டை அக்கா 'கட்டி' ஆண்டவள்தான். வீட்டு நிர்வாகத்திலிருந்து வணிக நிர்வாகம் என அதிகாரத்தை நோக்கிய நகர்வாக அக்காளின் நகர்வு இருக்கிறது. அதிகாரச் சுழலில், தன் தனிப்பட்ட வாழ்க்கையைத் தொலைத்தபிறகு, அக்கா தான் ஒரு சாதாரணப் பெண்ணாக, ஏதோ ஒரு முனுசாமிக்கு மனைவியாக வாழ்ந்திருக்கலாம் என்று அங்கலாய்ப்பது முரண்.

அடிவருடிகள், துதிபாடிகள், அடிமைகள் என இருப்பவர்களுக்கு, அதிகாரத்தில் இருப்பவர்கள் அடிமைகளாகிவிடுவதும் முரண். பாரதி, பெரியார், புதுச்சேரி நகரம், கிராமம் சார்ந்த பதிவுகளும் நாவலில் உண்டு. தொடக்கத்தில் எமன் வரும் பகுதி, கதைக்குள் நுழைய உதவும் நல்ல கற்பனை. இந்நாவலை விரிவாகப் பேச இன்னும் இடமுண்டு.

நீலக்கடல், மாத்தா ஹரி, கிருஷ்ணப்ப நாயக்கர் கௌமுதி, காஃப்காவின் நாய்க்குட்டி ஆகியவை இவருடைய பிற நாவல்கள். ●

பூச்சியத்தினுள் ஒரு புள்ளி

வட்டத்தில் இருப்பது
பூச்சியத்தினுள்
இருப்பது போன்று
அவ்வளவு எளிதன்று
பூச்சியத்தை
ஒரு புள்ளியில் உடைப்பதும்
அவ்வளவு எளிதன்று
பூச்சியத்தின் ஒரு புள்ளியில் பிடித்து
ஊதுலைக் காற்று விசிற
கம்மாலைத் தணலில் காய்ச்சி
அடித்து நிமிர்த்தினேன்
நீள் கோட்டை இழுத்து
நெடும் பாதை ஆக்கினேன்
அது விரல் பிடித்து அழைத்து
உங்களிடம் வந்து
கொண்டிருக்கிறது
கண்களைத் துடைத்தபடி
நயாகரா உறைகிறது
அமேசன் நதி ஊருக்குள் நுழைகிறது
உங்கள் கடல்
என் அலையின் நுனியிலேறிப் பாடுகிறது
அவ்வளவே தான்
உங்கள் கடல் நிரம்பியிருக்கவில்லை
என் சிப்பிகளுக்கு நான்
உயிரிடல் அவசியம் என்பதாக
நீங்கள் விதைத்திருக்கும்
முத்துக்களை சேமிக்கிறேன்
ஆயினும் நண்பா,
உங்கள் பூச்சியங்கள்
வெகு தொலைவில் அல்லவா இருக்கின்றன.

– தமிழ் உதயா



காத்திருப்பில் வார்த்தைகள்

மு.முருகேஷ் கவிதைகள்

வாய் தவறியோ,
கோபத்தில் உதிர்த்தோ,
சொல்லின் வல்லமை உணராமலேயோ...
யாரோ கொட்டிவிட்டுப் போன
வார்த்தைகள்
சிந்திக் கிடக்கின்றன...
கனரக வாகனங்கள் விரைந்தோடும்
நெடுஞ்சாலையொன்றில்.

வார்த்தைகளுக்கு
உரிமை கொண்டாடி
இதுவரை வரவில்லை யாரும்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு,
சட்டென குனிந்து எடுத்துப்போகும்
எண்ணமும் ஒருவருக்குமில்லை.

உரச் சாக்குப் பைகளில்
கிழிந்த பாலிதீன் குப்பைகளை
பொறுக்கிக் கொண்டு போகும்
சிறுவனின் பார்வையிலும்
இவை படவேயில்லை.

நெடுநேரமாக
பட்டுப்போன ஒற்றைப் பனையில்
காத்திருந்து,
வாகனங்கள் கடக்காத
ஒரு கணத்தில்
பாய்ந்து வந்து
செத்த எலியின் சிதிலங்களைக்
கொத்திப் போகிறது...
காகமொன்று.

நெடுஞ்சாலையெங்கும்
விரிந்துகிடக்கும் வெயிலின் மடியில்
தலை சாய்த்து,
யாரின் வரவிற்காகவோ
இன்னமும் காத்திருக்கின்றன
அந்த வார்த்தைகள்.

குரல் முகம்

அவரைப் போல் இவரில்லை
என்றவர்கள்,
இப்போது
இவரைப் போல்
அவரில்லை என்கிறார்கள்.

யாருமற்ற நாளொன்றில் -
அவரும் இவருமாக
பேசிக் கழித்த பொழுதுகளில்,
இருவரின் முகங்களுமழிந்து
ஒன்றாகிப் போயின
குரலற்ற உருவங்கள்.

இப்போதெல்லாம் -
இவரைப் பார்த்தவர்கள்
இவர்தான் அவர் என்கிறார்கள்.

அவரைப் பார்த்தவர்கள்
அவர்தான் இவர் என்கிறார்கள்.

இவரும் அவருமற்ற
உருவங்களெல்லாம்
ஒரே குரலில் சொல்லிச் சிரிக்கின்றன...
“உங்களுக்கெல்லாம்
முகம் மட்டுமல்ல;
குரலும் இல்லை“யென்று.

‘திண்ணைப் பேச்சாய்...’

(கட்டுரைத் தொகுப்பு - சோம. அழகு)

புனைவு எழுதும் படைப்பாளிக்கு சுதந்திரம் அதிகம். ஆனால் புனைவு அல்லாத கட்டுரைகளை எழுதும்போது அந்த சுதந்திரம் சற்று கட்டுக்குள்தான் இருக்க இயலும்.

கட்டுரைகளிலும் இரு வேறு விதமான பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. கனமான விஷயத்தை கடினமான மொழியில், தரவுகள், ஆதாரங்கள் அடிப்படையில் தருவது ஒருவகை. கடினமான கருத்துகளையும் வாசிப்பவர்கள் புரிந்து கொள்ளத் தோதாக எளிமையான நடையில், வாசிப்பவர்களின் கவனத்தை சிதற விடாத வகையில் பகடி கலந்து, அதே சமயத்தில் சொல்ல வந்த கருத்தை ஆணித் தரமாக வாசிப்பவர்களின் மனங்களில் பதிய வைப்பது இன்னொரு வகை. இரு வகையான படைப்புகளுமே படைப்பாளிகளுக்கு சவால் அளிப்பவைதான். அதிலும் இரண்டாவது வகைப் படைப்பு கிட்டத்தட்ட கத்தி மீது நடப்பது போன்றது. வாசகர்களை கட்டுக்குள்ளும் வைத்திருக்க வேண்டும் ; அதே சமயம் சொல்ல வந்த விஷயத்தை வாசிப்பவர்கள் மனதில் ஆழமாக பதிய வைக்கவும் வேண்டும்.

அத்தகைய இரண்டாவது வகை சார்ந்த 21 கட்டுரைகள் அடங்கிய தொகுப்பே சோம. அழகுவின் “ திண்ணைப் பேச்சாய் ... “ எனும் நூல். நெல்லையில் வாழும் இந்த இளைய படைப்பாளி “ திண்ணை “ இணைய இதழில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

தொகுப்பில் உள்ள எல்லாக் கட்டுரைகளுமே ஒவ்வொரு கோணத்தில் சிறப்பானவைதான் எனினும் ஒரு சில கட்டுரைகளை குறிப்பிட்டுச் சொல்லத்தான் வேண்டும். அவரது தாத்தாவின் மரணம் தவிர்க்கமுடியாது போய் விட்ட சூழலில் அவர் மனதில் எழும் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டு வரும்போதே, மரணம் நிகழ்ந்துவிட்ட பின் தாத்தாவின் உடலை ஏற்றிச் செல்லும் வாகனத்தில் தானும் ஏறி அன்பான தாத்தாவை மயானம் வரை சென்று கடைசி முறையாக வழி அனுப்ப நினைக்கும் அவரது விருப்பத்தை நிறைவேற்ற விடாத அர்த்தமற்ற சமூகக் கட்டுபாடுகள் மீது அவருக்கு ஏற்படும் சீற்றம் கட்டுரையை வேறு ஒரு தளத்திற்கு எடுத்துச் சென்று விடுகிறது.

உடன் உட்கார்ந்து உணவருந்தும் உறவினர்களால் அவமானப்படுத்தப்படும் உணவக ஊழியரிடம் மனமாற மன்னிப்பு கேட்க விழையும் அவரது மென் மனத்தையும், நாள் முழுவதும் நின்று கொண்டே பணி புரியும் ஜவுளிக்கடை ஊழியர்கள் மேல் அவருக்கு ஏற்படும் அனுதாப உணர்வையும் வெளிப்படுத்தும் கட்டுரை மானுடம் இன்னும் வாழ்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லிச் செல்கின்றது.

தாய்மொழிக்கு ஏற்பட்டுள்ள பரிதாபமான நிலையை உணர்த்தி பாரதிக்கு அவர் எழுதும் கற்பனைக் கடிதம் மேல் பார்வைக்கு வெறும் பகடியாகத் தோன்றினாலும் அதில் பொதிந்திருக்கும் யதார்த்தம் வலி ஏற்படுத்தத்தான் செய்கிறது.

அண்ணாச்சி கடைகளை விரட்டியடிக்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள பல்பொருள் அங்காடிகளை இனி தவிர்க்க முடியாதுதான். என்றாலும் அண்ணாச்சி கடையில் பொருள் வாங்கும் அனுபவம் தரும் மகிழ்ச்சியை ஒரு கட்டுரையில் விவரித்து நுகர்வு கலாச்சாரம் நம்மை எங்கே கொண்டு போய் நிறுத்தியுள்ளது என்பதை கண்முன் கொண்டு வருகிறார் இன்னொரு கட்டுரையில்.

வாழ்வில் சந்தித்த சக உறவுகள், மனிதர்கள், சம்பவங்கள் ... என்று எல்லாவற்றையுமே அவருக்குரிய கூர்மையான பார்வையால் பார்த்து சமைக்கப்பட்டுள்ள கட்டுரைகள் வாசிக்கும் நம்மிடம் நிச்சயமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்கின்றன.


அவருடைய அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்து கொள்ள அவரது சரளமான எழுத்து நடை பெரும் உதவி செய்துள்ளது. வாழ்வில் அவரது அனுபவங்களும், வாசிப்பும் கூடக் கூட புனைவு எழுத்திலும் அவரால் பெரும் பங்களிக்க முடியும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

‘திண்ணைப் பேச்சாய்...’
(கட்டுரைத் தொகுப்பு)
ஆசிரியர்: சோம. அழகு.
வெளியீடு: காவ்யா, சென்னை.
விலை: ரூ.180/-



கட்டுரை

இரா.நாறும்பூநாதன்



புதுச்சேரி – கி.ரா.சொன்ன கதை

நைனாவைப்பார்த்து எவ்வளவு நாளாச்சு. லாஸ்பேட்டையில் அவரது வீட்டில் அவரைப்பார்த்தவுடன் ரொம்ப சந்தோசமாக இருந்தது. வயசு 93. என்னை நினைவில் வைத்திருக்கிறாரோ என்னவோ என்று முதலில் பயந்தேன். எங்கள் திருமணத்தின்போது தான் எனது மனைவி பார்த்திருந்தாள். நான் ஒரு பத்து வருடங்களுக்கு முன்பு புதுச்சேரியில் நடந்த மாநிலக்குழுக் கூட்டத்திற்கு சென்றிருந்தபோது கி.ராவைப் பார்த்தேன். அதன்பிறகு இப்போ தான்.

"என்ன இப்படிக் கேட்டுட்டீக..அதான் பேப்பர்ல அடிக்கடி பாக்கேன்ல..." என்று சிரித்தார். பேச்சு எங்கெங்கோ சென்றது. புத்தகம், விற்பனை என்று வரும்போது, நைனா சட்டென்று "உங்க கிட்டே அன்டன் செகாவ் சொன்ன கதை ஒன்னை சொல்லட்டுமா?" என்றார். நான், நண்பர் பி.என்.எஸ்.பாண்டியன், எனது மனைவி உஷா மற்றும் அவரது வீட்டார் அனைவரும் கதை கேட்கும் ஆவலில் அவரை சுற்றி உட்கார்ந்தோம்.

"அன்டன் செகாவ் சொல்றார். அவரோட நண்பர் ஒருத்தருக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை. அது என்னன்னா புஸ்தகக்கடை வைக்கணும்னு. அவரு நிறையப் புஸ்தகங்கள் படிக்கிறவரு... ஒரு நல்ல நாள்ல மாஸ்கோ நகரத்தின் பிரதான வீதியில ஒரு புஸ்தகக் கடை ஆரம்பிச்சாரு. ஒரு தெருவோட முனையில கடை. ரெண்டு பக்கமும் விற்பனை செய்ய முடியும் என்ற மாதிரி ரெண்டு பக்கமும் வாசல் வைத்திருந்தார். கடை திறப்பு விழாவிற்கு முக்கியமான எழுத்தாளர்கள், கலைஞர்கள் எல்லாரும் வந்திருந்தாங்க. இவரோட புத்தகக்கடையில் டால்ஸ்டாய், புஷ்கின் எழுதிய புஸ்தகங்கள் எல்லாம் இருக்கு. ஏராளமான புஸ்தகங்கள். மறுநாளில் இருந்து அவரு புஸ்தகங்கள் வாங்க மக்கள் நிறைய பேரு வருவாங்கன்னு எதிர்பார்த்தாரு... ஒருத்தரும் வரல. சாயந்திரம் நேரமா ஒரு



சிறுவன் வந்தான். இவரு ஆவலோடு எழுந்திரிச்சுப் போயி என்ன வேணும்னு கேட்டாரு.

"ரெட்டைக் கோடு நோட்டு இருக்கா?" என்று கேட்டான்.

"தம்பி..இது புஸ்தகக்கடை. கதை, நாவல் மாதிரி புத்தகங்கள் கிடைக்கும். நோட்டு, புஸ்தகங்கள் எல்லாம் கிடைக்காது.." அப்படீன்னு சொன்னாரு இவரு.

மறுநாளு, இன்னொரு பொம்பளையாளு வந்துச்சு. "புளி கால் கிலோ கொடுங்க"ன்னு கேட்டாங்க. இவரு உடனே "எம்மா... இது புஸ்தகக்கடை. அதெல்லாம் கிடைக்காது.. ன்னு" சொல்லிட்டாரு...

இப்படியே ஒரு மாசம் போச்சு. ஒரு புஸ்தகமும் விக்கல. மாஸ்கோ நகரத்துல உள்ள கடை இல்லையா... வாடகையும் ரொம்ப. அவருக்கு வாடகை கொடுத்து முடியுமான்னு கொஞ்சம் சந்தேகம் வந்துச்சு.

பொறகு ஒரு முடிவு பண்ணினாரு. மறுநாள்ல இருந்து யார் என்ன கேட்டாலும் நாளைக்கு வாங்க கிடைக்கும்னு சொல்லி, அதை வாங்கி வச்சாரு. இப்ப, கடைக்கு

கூட்டம் வர ஆரம்பிச்சது. பசங்க அழி ரப்பர், ஜாமெட்ரி பாக்ஸ், பேனான்னு வாங்க ஆரம்பிச்சாங்க. இப்படியே புளி, மிளகாத்தல், பூண்டு, கத்தரிக்காய்ன்னு வாங்கி வைச்சு வியாபாரம் பண்ண ஆரம்பிச்சாரு. கடைல விற்பனை சூடு பிடிக்க ஆரம்பிச்சாச்சு. கடையின் ரெண்டு பக்கமும் வியாபாரம்... கடும் வியாபாரம்... ரெண்டு ஆள் போட்டு கடைய நடத்த ஆரம்பிச்சாரு... இப்படியா அது கிட்டத்தட்ட ஒரு பலசரக்குக் கடையா மாறிப்போச்சு... புஸ்தகங்கள் கொஞ்சம் கொஞ்சமா பின்னுக்குப் போக ஆரம்பிச்சது.

ஒரு வருஷம் கழிச்சு, ஒரு காலை நேரத்துல ஒரு மனுஷன் வந்து "புஷ்கின் கவிதைகள் கிடைக்குமான்னு" கேட்டாரு.

இவரு கொஞ்சம் யோசிச்சிட்டு, " ஐயா... புஷ்கின் கவிதை புஸ்தகமெல்லாம் என்கிட்டே இருக்கு..ஆனால் எல்லாம் பின்னால பரண்ல இருக்கு..ரெண்டு நாலு கழிச்சு வந்தீகன்னா வாங்கிகிடலாம்.." அப்படீன்னாரு.

வந்த ஆளு முழிச்சாரு...கடைக்காரர் சொன்னதைப் பார்த்து பரண்ல இருந்த புத்தகங்களுக்குள் இருக்கும் டால்ஸ்டாய், புஷ்கின் கூட சிரிச்சாங்க...அவ்வளவு தான் கதை..." என்று சொல்லி முடிச்சாரு எங்க நைனா.

"இதுல இருந்து என்ன நீதின்னு தெரியுதுல்லா.." என்று நண்பர் பி.என்.எஸ். பாண்டியனைப் பார்த்தும் சிரித்தார் கி.ரா.

புஷ்கின், டால்ஸ்டாய் ஆகியோரோடு நாங்களும் சிரித்தோம்.

எழுத்தாளர் கி.ரா.வுக்கு வழி காட்டிய புஷ்கின். கி.ரா.சொன்ன இன்னொரு கதை இது.

இப்பம்லா வெளிய போக முடியாம வீட்டுக்குள்ளேயே கிடக்கேன். அஞ்சு வருசத்துக்கு முன்னாடி டெல்லிக்கு ஒரு சோலியா போயிருந்தேன். ஒரு



நிகழ்ச்சிக்குத்தான். எல்லோர்கூடேயும் போயிட்டே இருக்கும்போது, வேடிக்கை பார்த்துட்டே வழி தவறிப் போயிட்டேன். நடந்து போகலாம்னு போனது வம்பாப்போச்சு... வேற ரூட்டுல வந்துட்ட மாதிரி தெரிஞ்சது. வந்த இடத்துக்கு எப்படிப் போகணும்னு தெரியல.

எனக்கோ இந்தி தெரியாது. இங்கிலிசும் தெரியாது. என்ன செய்ய?

சரி...அப்படியே நடப்போம்னு நடந்தேன்.. அகலமான வீதி... அங்கெ ஒரு சிலை... கம்பீரமான சிலை... முகத்துல ஒரு தேஜஸ்... ஆச்சர்யத்தோடு அந்த சிலையைப் பார்த்தபடியே நின்னேன்... யாரு இந்தாளுன்னு தெரியலையே...

அந்த வழியே போய்க்கொண்டு இருந்த ஒரு ஆசாமிட்ட, எனக்குத் தெரிந்த ஒட்டை இங்கிலிஷ்ல இவரு யாருன்னு கேட்டேன்..

அவர் சொன்னது முழுதும் எனக்குக் காதுல விழல... ஆனால் கடைசியா சொன்னது மாத்திரம் காதில் விழுந்தது... இவர் புஷ்கின்.

அட..சோவியத் எழுத்தாளர் புஷ்கின்.. எவ்வளவு கவிதைகள் எழுதின மனுசர்... இவருக்கு சிலை வைத்திருக்காங்களே... என்றபடி பின்னால் பார்த்தேன். அது சோவியத் நாட்டின் தூதரக அலுவலகம். முன்னால் சிவப்புக் கொடி பறந்து கொண்டிருந்தது.

ஒரு உரிமையில் அருகே சென்று, நான் யார் என்று சொல்லி, எங்கே போகணும் என்றும் சொன்னேன். அங்கெ இருந்தவங்க நான் ஒரு எழுத்தாளன் என்றதும் மரியாதை கொடுத்து, விழா நடக்கும் இடத்திற்கு எப்படிப் போகணும் என்று சொல்லி ஒரு ஆட்டோ அமர்த்தி அனுப்பி வச்சாங்க. ரொம்பத் தூரம் என்பது போனபிறகு தான் தெரிந்தது.

ஒரு எழுத்தாளனுக்கு சிலை வைக்கணும்னு ரஷ்யாக்காரனுக்கு தெரிஞ்சிருக்கு பார்த்தீங்களா..? நம்மூர்ல இதெல்லாம் நடக்குமா..

என்னமோ பாரதிக்கு மாத்திரம் வச்சிட்டாங்க... அது வேற விஷயம்... ஒரு கவிஞனுக்கு, அதுவும் வெளிநாட்டுல உள்ள தூதரக அலுவலகத்தின் வாசல்ல சிலை வைக்கணும்னு அந்த நாடு சிந்திச்சுருக்குதே... அது எவ்வளவு பெரிய விஷயம்.." •

கண்டல்...

சுப்ரா

ரிச்சர்ட் பக்மின்ஸ்டர் ஃபுல்லர் [ஜுலை 12, 1895 ஜுலை 1 1983] ஓர் அமேரிக்க கட்டிடக்கலைஞர், எழுத்தாளர், வடிவமைப்பாளர், கண்டுபிடிப்பாளர், எதிர்காலவியலாளர். குறைந்த உள்ளீடுடன் கூடிய உற்பத்தியை சூழலுக்கு கேடு விளைவிக்காமல் தருவது எப்படி என்பதைப் பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்தவர். வாழ்க்கையை ஒரு பரிசோதனையாக வாழ்ந்து காட்டியவர்.

ஜியோடேசிக் டோம், டைமாக்ஸியன் கார், எதிர்கால அறிவியல் நகரங்களின் அமைப்பு ஆகியவற்றை வடிவமைத்து அசத்தியவர். ஆனால் மனிதர் கொஞ்சம் வித்தியாசமானவர். அதாவது சற்று கிறுக்குத்தனமான விஞ்ஞானி. உலகம் முழுவதும் அலைந்து கொண்டே இருந்ததால் வெவ்வெறு நகரங்களில் நேரம் என்ன என்று அறிய எப்போதும் மூன்று கடிகாரங்களை அணிந்திருப்பாராம். ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரமே உறங்குவாராம். டைமாக்ஸியன் ஸ்லீப் என்று தன் உறக்கத்திற்கு அவர் பெயர் கொடுத்திருந்தார். ஆனால் அவரது சகாக்களால் இதற்கு ஈடு கொடுக்க முடியாமல் போனதால் அந்தப் பழக்கத்தை கைவிட்டு விட்டார். அவரது இன்னொரு விசித்திரப் பழக்கம் தன் வாழ்க்கை நிகழ்வுகளை 1915ல் இருந்து 1983ல் அவர் இறக்கும் வரை ஒவ்வொரு பதினைந்து நிமிடமும் என்ன நடந்தது என்று அவ்வப்போது எழுதி வந்ததுதான்.

ஃபுல்லர் அடிக்கடி மேற்கோள் காட்டுவது ஒரு நிகழ்ச்சி. அவர் ஒரு குழந்தையிடம் "ஒரு முக்கோணம் வரைந்து காட்டு "என்றாராம். குழந்தை திருப்பிக் கேட்டதாம்: "எங்கே?'' இக்கேள்வியே அவருடைய பிற்காலத்திய ஆராய்ச்சிகளுக்கு வித்திட்டதாம் . அந்தக் குழந்தையின் கேள்வியின் ஆழத்தை சற்று உள்ளே சென்று பார்த்தால் இன்னொரு ஃபுல்லர் உருவாக வாய்ப்பு உள்ளது.

"குழுமி'' என்ற சொல்லிலிருந்து கும்மி என்னும் சொல் உருவாகியிருக்கலாம் என்றும், குழு, கும்மு என்பதே நாளடைவில் கும்மி என்று பெயர் பெற்றிருக்கலாம் என்பதும் பொதுவான கருத்து. கும்மி இலக்கியங்களில் பலவகைகள் உள்ளன. "கரிப்புக்கும்மி" என்பது பஞ்சம் குறித்து எழுதப்பட்ட கும்மிப் பாடல்கள்.

கி.பி. 1876 முதல் 1878 வரை தமிழகத்திலும், கர்நாடக, ஆந்திரா மாநிலங்களிலும் ஒரு கடுமையான பஞ்சம் நிலவியது. இது தமிழாண்டு "தாது" வருடத்தில் ஏற்பட்டதால் "தாது வருஷப் பஞ்சம்" என்றே அறியப்பட்டும், அழைக்கப்பட்டும் வருகின்றது. காஞ்சிபுரத்தைச் சார்ந்த கள்ளப்புலியூரில் வாழ்ந்த மலைமருந்தன் என்ற புலவர் [பர்வத சஞ்சீவி என்ற இயற்பெயரின் தமிழாக்கம்] இவர் இந்த பஞ்சத்தைப் பற்றி எழுதிய "தாது வருஷத்து கரிப்புக்கும்மி'' என்ற நூலை தஞ்சை சரசுவதி மகால் நூலகம் பதிப்பித்துள்ளது. இந்த நூலில் பஞ்சத்தின் கொடுமையையும், பஞ்சத்தின் நடுவிலும் மனிதர்களின் நல்ல குணங்களும், கெட்ட குணங்களும் வெளிப்பட்ட விதத்தையும் ஆசிரியர் தெளிவாக எடுத்துரைக்கிறார். கூடவே இந்தப் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில்தான் சென்னையில் ஏழு கிணறுகள் தோண்டப்பட்டு நீர் விநியோகம் நடைபெற்றது, பக்கிங்காம் கால்வாய் வெட்டப்பட்டது போன்ற தகவல்களையும் போகிற போக்கில் சொல்லிச் செல்கிறது நூல். பஞ்ச காலத்தில்கூட மனிதர்களில் சிலர் ஈவு இரக்கமின்றி நடந்து கொண்டார்கள் என்பதை கீழ்கண்ட கண்ணிகளால் அறிய முடிகிறது. இந்த விஷயத்தில் அந்தக்காலம், இந்தக்காலம் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது என்பது போல உள்ளது இதில் சொல்லப்பட்டுள்ள செய்தி.

வடக்கு தேசத்து மனிதர்கள்/ வண்டிகளைக் கொண்டு தெற்கேபோய்/ தடங்க லில்லாமல் தானியம் பிடித்து/ தங்களிடம் போறார் பாருங்கடி [60]

வடக்கு தேசத்து வண்டிகளால் தெற்கில்/ வந்திடுங் கரிப்பு என்று சொல்லி/ திடத்த போலீசு காரர் வண்டிகளைத்/ திருப்பி விட்டார் கேளுங்கடி [61]

"தமிழ் நெஞ்சம்'' வெளியீடாக வெளி வந்துள்ள "சுபி பிரேம்" எழுதிய குறுங்கவிதைகளின் தொகுப்பு ''குதிரையாளி''. தொகுப்பில் பளிச்சென்று கண்ணில் பட்ட கவிதை ஒன்று.



நிமிர்ந்து இருந்தும்
மூழ்கிக் கிடக்கிறது நீரில்
தாமரை பிம்பம். ●

இதழ் வடிவமைப்பு: டிஜைன்ஷாப், 76677 55673.

வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்...

வணக்கம்.

காணிநிலம் இதழை வாசித்து ஆதரவளிக்கும் அன்பு உள்ளங்களுக்கு நன்றி. வரும் இதழ்கள் சிறப்பான படைப்புகளுடன் உங்கள் வாசிப்பு அனுபவத்திற்கு மேலும் சுவை கூட்டும் வகையில் அமையும் என்பதை சந்தேகங்களுக்கு இடமின்றி உறுதி அளிக்கிறோம்.

இதழ் மேலும் பலரைச் சென்றடைய தங்கள் ஆதரவைத் தொடர்ந்து அளிப்பதோடு இலக்கிய ஆர்வம் உள்ள தங்கள் நண்பர்கள் குறித்த கீழ்கண்ட விபரங்களை மின்னஞ்சல் மூலமோ, அஞ்சல் மூலமோ அனுப்பி வைத்தால் அவர்களுக்கு காணிநிலம் இதழ் பிரதிகளை அனுப்பி வைக்கிறோம். அவர்களுக்கு இதழ் பிடித்திருந்தால் அவர்களும் சந்தாதாரர்கள் ஆவதன் மூலம் இதழ் சென்றடையும் பரப்பு மேலும் கூடும் .

1. நண்பர்களின் பெயர்
2. அஞ்சல் முகவரி
   [அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்]
3. தொடர்பு எண்.

– ஆசிரியர் குழு, காணிநிலம்.

26-01-2018 அன்று நெல்லையில் நடைபெற்ற

'காணிநிலம்' இலக்கியக் காலாண்டிதழ் வெளியீட்டு விழா















